Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

விலை: ரூபா 7.00

பக்கங்கள் -12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி-30 | 12-06-2004 | சனிக்கிழமை | ஓசை -115

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.

T.P: 024-222 4247
(சி-9598) 077-6059672

# நிலக்கண்ணியில் சிக்கி பாரவூர்தி சிதறியது; சாரதி உட்பட மூவர் பரிதாப மரணம்!

## பரந்தனில் நடந்த துயரம்

(அலுவலக செய்தியாளர்)

**பரந்தன் முதலாம் கட்டைப் பகுதியில் நேற்று வாகன எதிர்ப்புக் கண்ணிவெடியில் சிக்கியதில் பாரவூர்தி சிதறியது இதில் பயணம் செய்த சாரதிஉட்பட மூவர் உடல்சிதறிப் பரிதாபகரமாகச் சாவடைந்தனர். இதில் சாவடைந்த வாகனச்சாரதி பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவராகும்.**

தனியார் காணியொன்றை துப்புரவு செய்யச்சென்ற கனரக வாகனத்திற்கு (டோசர்) எரிபொருளை ஏற்றிச்சென்று விட்டு பிரதான சாலையை நோக்கி திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே மேற்படி வாகனம் கண்ணிவெடி விபத்தில் சிக்கியுள்ளது.

மேற்படி சம்பவத்தின் போது கனர கவாகனத்தின் உரிமையாளரான குருநாகலை சேர்ந்த ஏ.பி.தயாரத்தன உதவிக்கு சென்ற அம்புரோஸ் அலெக்ஸ் புருஸ்டன் (ஜெனி), சிவநகர் உருத்திரபுரத்தைச் சேர்ந்த சுரேஸ்(நளின்) ஆகியோரே பரிதாபகரமாக உயிரிழந்தவர்களாவர்.

மேற்படி கண்ணிவெடி வெடித்த இடத்திற்கு அருகில் ஏற்கனவே ஒரு வெடிபொருள் வெடித்ததால் பாதை பயணிப்பதற்கு தடை செய்யப்

(12ஆம் பக்கம் பார்க்க)



கண்ணிவெடியால் ஏற்பட்ட பாரிய குழியும்.சிக்கிய பாரவூர்தியும்.

## இலங்கை எண்ணெய் வள ஆராய்ச்சி குறித்து ஜே.வி.பி அமைச்சர் -நோர்வேத் தூதுவர் பேச்சு

(கொழும்பு)

ஜே.வி.பி.யைச் சார்ந்த மீன்பிடி வளங்கள் துறை அமைச்சராக இருக்கும் சந்திரசேனவுக்கும், நோர்வே தூதுவர் கான்ஸ் பிரஸ்கருக்கும் இடையில் நேற்றைய தினம் சந்திப்பொன்று இடம்பெற்றிருக்கிறது.

இதன்போது நோர்வே இலங்கையில் எண்ணெய் வளங்களை அகழ்வாராய்வு செய்வதற்கான திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்கான திட்டம் பற்றிக் கலந்துரையாடப்பட்டதாகவும் இதன் அடிப்டையில் நோர்வே இலங்கைக்கு 5.2 மில்லியன் டொலர்களை வழங்கப் போவதாகவும் அதில் 2.3மில்லியன் டொலர்கள் நன்கொடையாகவும் ஏனைய தொகை கடன் அடிப்படையிலும் வழங்கப்பட இருப்பதாகவும் அறிய வருகிறது. 1970 ஆம் ஆண்டிற்குப் பின் இலங்கையில் எண்ணெய் அகழ்வராய்ச்சி எவையும் இடம்பெறவில்லை

(12ஆம் பக்கம் பார்க்க)

## -புளியங்குளம் பகுதியில்- தண்ணீர் தாங்கி தடம்புரண்டு ஒருவர் பலி, இருவர் காயம்

ஏ-9 பிரதான வீதியில் புளியங்குளம் பகுதியில் தண்ணீர் தாங்கி தடம்புரண்டதில் ஒருவர் உயிரிந்தார் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 8.00மணி யளவில் புளியங்குளத்திலிருந்து கனகராஜன் குளம் நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் தண்ணீர் தாங்கிவாகனம் புளியங்குளப்பகுதியில் வீதியில் வேக மாக வந்து பள்ளத்தில் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டுள்ளது. இதன் போது தண்ணீர் தாங்கியின் மேற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அக்மீமன தயாரத்ன தேரரை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

நீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த வேளை பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட அக்மீமன தயாரத்தின தேரரை இம்மாதம் 25ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று அழைப்பானை பிறப்பித்துள்ளது கந்தலுவெ ரத்தினசீக தேரர் தாக்கல் செய்திருந்த இம்மனுவை பரிசீலனை செய்த மாவட்ட நீதவான் எஸ்.எம்.எஸ்.சமரக்கோன் இந்த அழைப்பானையை விடுத்தார். அக்மீமன தயாரத்தின தேரருக்கு எதிராக நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கபட்டிருந்தது அந்த உத்தரவை அவரிடம் கையளிக்க முடியாமல் போனதாக நீதிமன்றத்தின் உத்தியோகத்தர் தம்மிடம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இரு படையினரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாகர்கோவில் முன்னரங்க நிலைப்பகுதியில் இராணுவ அதிகாரி ஒருவரும் அவரது உதவியாளரும் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. கடந்த 7ஆம் திகதி முதல் இவர்கள் காணாமல் போயுள்ள தாகக் கண் காணிப்புக் குழுவிற்கு அறிக்கப்பட்டுள்ளது இதே வேளை இவர்கள் தப்பியோடியிருக் கலாம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புதூர் பொங்கல் உற்சவத்திற்காக முகமாலை ஓமந்தையூடான போக்குவரத்து நேரம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்திற்காகச் செல்லும் பக்தர்களின் நன்மைகருதி முகமாலை மற்றும் ஓமந்தை ஆகிய சோதனைச் சாவடிகளூடான போக்குவரத்து நேர எல்லையில் நீடிப்புச் செய்யப்பட்டிருப்பதாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

அந்தவகையில் எதிர்வரும் 13,14 ஆம் திகதிகளில் மேற்படி இரு சோதனைச்சாவடி தடைமுகாம்களும் சிறிலங்கா நேரம் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 6.30 மணி

(12ஆம் பக்கம் பார்க்க)

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசையினால் லெப்.கேணல் சாள்ஸ் மண்டபம் திறப்பு

(முல்லைத்தீவு)

கடற்புலி மாவீரர் லெப்.கேணல் சாள்ஸ் அவர்களின் பதினொரம் ஆண்டு நினைவாக நினைவு மண்ட பம் ஒன்று நேற்று முல்லைத்தீவில் திறந்து வைக் கப்பட்டது. கடற்புலிகளின் பாசறை ஒன்றில் சிறப்புற நடைபெற்ற மேற்படி நிகழ்வின் பொதுச் சுடரினை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர். க.வே.பாலகுமாரன் அவர்கள் ஏற்றிவைத்தார் தேசியக் கொடியினை புலிகளின்குரல் பொறுப்பாளர் தமிழன்பன் ஏற்றிவைத்தார்.

நினைவு மண்டபத்தை கடற்புலிகளின் விசேட தளபதி சூசை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார் தொடர்ந்து மாவீரர் சாள்சின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை கடற்புலிகளின் மகளிர் படையணி யின் விசேட தளபதி விடுதலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து படத்திற்கான சுடரினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான தியாகன் ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து உள்ளரங்க நிகழ்வுகள் கடற்புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த வினாயகம் தலைமையில் ஆரம்பமானது இதில் சிறப்புரைகளை க.வே.பாலகுமாரன், கடற்புலிகளின் விசேட தளபதி சூசை ஆகியோர் ஆற்றினர்.

(12ஆம் பக்கம் பார்க்க)



## வரிவிளம்பரம்

**காணி விற்பனை**

எமது 73ஆம் இலக்க ஜெயந்திநகர் காணியில் 1/2 ஏக்கர் விற்பனைக்குண்டு. தொடர்பு வை.மகேந்திரராசா, 84, ஜெயந்திநகர் கிளிநொச்சி.(4604)

**ஆசிரியர்போட்டிப் பரீட்சைவகுப்பு**

எதிர்வரும் யூலை மாதம் 3ஆம் வாரத்தில் நடை பெறவுள்ள தகுதி காண் ஆசிரியர் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள் ஆரம்பம். இடம் அக்கராயன் ம.வி.12.06.2004 சனி, ஞாயிறு காலை 930 மணி 275 சில்வா வீதி, வட்டக்கச்சி 12.06.2004 சனி மாலை 4.15 மணி. (4592)


# காது-மூக்கு-தொண்டை நிபுணரின் விசேட சிகிச்சையும் ஆலோசனையும்

அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருக்கும் காது, மூக்கு, தொண்டை சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியக் கலாநிதி ஜெயலிங்கம் அவர்களால் கிளிநொச்சி டாக்டர் பொன்னம்பலம், ஞாபகார்த்த (தனியார்) மருத்துவ மனையில் இன்றும், நாளையும் காலை 8 மணியிலிருந்து மாலை5 மணிவரையும் மருத்துவ ஆலோசனையும் சிகிச்சையும் நடைபெறும், அத்துடன் 14 ஆம் 15 ஆம் திகதி திங்கள், செவ்வாய் கிழமைகளில் புதுக்குடியிருப்பு டாக்டர், பொன்னம்பலம் மருத்துவமனையில் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வைத்திய ஆலோசனையும் சிகிச்சையும் நடைபெறும். பயன்பெற விரும்புவோர் வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகிறீர்கள்.

# விசாரணை

(கொழும்பு)

பத்திரிகையாளர் தாக்கப்பட்டது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அவரது மெய்க்காவலர் மீது பொலிசார் விசாரணை நடாத்தி வருகின்றனர்.'லங்காதீப' வின் மாகாணச் செய்தி ஆசிரியரான டபிளயு. ஜீ.குணரட்ண என்பவரை தாக்கிய தற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி ரட்ணாயக்கவும் அவரது மெய்க் காவலருமே பொலிசாரால் விசாரிக் கப்பட்டு வருகின்றனர்.

பத்திரிகையாளர் பாராளுமன்ற உறுப்பினரின் மெய்க்காவலரால் வயிற்றில் உதைக்கப்பட்டதாகவும் இது குறித்த முறைப்பாடு மேலதிக விசாரணைக்காக நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# மதிய உணவு வழங்கல் தொடர்பான செயலமர்வு

வடமராட்சி கிழக்கு பாடசாலைகளில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் மதிய உணவு வழங்கும் செயற்பாட்டுக்கான அந்த பிரதேசப் பாடசாலை அதிபர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்கள் கிராம அலுவலர்கள் ஆகியோருக்கு இந்த திட்டம் சம்பந்தமான செயலமர்வுகள் பின்வரும் இடங்களில் நடத்தப்பட உள்ளதாக வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் வெ.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார் இதன் பிரகாரம் வடமராட்சி இராணுவ கட்டுப்பாட்டுப்பிரதேச பாடசாலைக்கு எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை குடத்தனை அ.த.க பாடசாலையிலும் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி பிரதேசப் பாடசாலைகளுக்குஎதிர்வரும் 22ஆம் திகதி செய்வாய்கிழமை மருதங்கேணி இ.த.க பாடசாலையில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.00மணி வரை நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


## கிளி /தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் கிளிநொச்சி மாவட்டம்.

# பதவி வெற்றிடம்

கிளிநொச்சி தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்தில் பின்வரும் பதவி நிலைகளுக்காக விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**1. கணக்கு பதிவாளர்:**

* க.பொ.த. உயர்தரத்தில் வணிகத்துறையில் கணக்கியல் உட்பட 3பாடச்சித்தி.
  அத்துடன்
  க.பொ.த. (சா/த) பரீட்சையின் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி
* அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் Ms. office கணினிக்கற்கை கற்றிருத்தல்.
* இரண்டுவருட வேலை அனுபவம்.

**2. நூலக உதவியாளர் :- (தற்காலிகம்)**

* க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி.
* க.பொ.த.(உ/த) பரீட்சையில் 3 பாட சித்தி.
* அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் நூலகம் தொடர்பான கற்கை/ அனுபவச் சான்றிதழ்.

மேற்படி தகைமையுடையவர்கள் எதிர்வரும் 20.06.2004க்கு முன் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

அதிபர்,
கிளி/தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்,
கிளிநொச்சி.

(சி-9829)

# வேலைவாய்ப்புக்கான பயிற்சிநெறி

☞ பரீட்சை எழுதிவிட்டுச் சும்மா இருக்கிறீர்களா?
☞ தகுதிக்கேற்ற வேலையைத் தேடிக்கொள்ள அரிய சர்ந்தர்ப்பம்

**குறுகிய காலத்தில் உங்கள் எதிர்காலம் வளம்பெற...!**

| | |
|---|---|
| நேரடி ஒலிபரப்பாளர் | பயிற்சிநெறிகள்!! |
| ஊடகவியலாளர் | |

ஜோ-எகட்டனால் இலங்கை வெகுஜன ஊடக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் பயிற்சிநெறி!

பயிற்சி வழங்குபவர்கள்.

◈ கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளர்கள்.
◈ மிகப்பிரபல்யமான ஒலிபரப்பாளர்கள்.

பயிற்சிக்கான முழுக்கட்டணம் ரூபா 5000/= மட்டுமே

பதிவுக்கான முடிவுத்திகதி 15.06.2004

ஆரம்பம் ஜீன் -19 ஆம் திகதி பி.ப.3 மணி

பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

பதிவுக் கட்டணம்ரூபா 1000/=மட்டும்

ஆங்கிலம் தவிர்க்கப்பட்டுள்ளது

தமிழ்மொழித் திறமைச் சித்தியுடன் க.பொ.த(சா)தரம் சித்தி

* பதிவுக்கட்டணத்தை நேரில் செலுத்திப் பதிவை மேற்கொள்ளலாம்.

தொடர்பு: செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குழி,யாழ்ப்பாணம்.
T.P.2227227

*காரியாலய நேரம் காலை 10.30 மணி-பிற்பகல் 3.00 மணிவரை

(சி.9914)

# புதிய பிரிவு ஆரம்பம்

T.TA ஆதரவுடன் தமிழீழ மாணவர் அமைப்பு நடாத்தும் கணினிக் கற்கை நெறி புதிய பிரிவு ஆரம்பம்

**1.MS. OFFICE (X P)**

- i கணினி அறிமுகம்
- ii Ms. WORD
- iii Ms. EXCEL
- iv Ms. POWER POINT
- v Ms. ACCESS.

**2. TYPE SETTING, GRAPHIC DESIGN**

- i. PAGE MAKER (7,0)
- ii PHOTO SHOP (7,0)
- iii COMPUTER TYPING

18.06.2004 அன்று புதிய பிரிவு ஆரம்பிக்கப்படுவதால் அதற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.

கணினிப் பயிற்சி நிலையம்
தமிழீழ மாணவர் அமைப்பு
தண்ணீரூற்று
முள்ளியவளை.

(சி-9715)


# சாவுஅறிவித்தல்

திருமதி
## தம்பிராசா தெய்வானைப்பிள்ளை

வடமராட்சி கிழக்கு, வேம்படி உடுத்துறையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி.தம்பிராசா தெய்வானைப்பிள்ளை 10.06.2004 காலமானார். அன்னார் காலம் சென்ற சின்னத்தம்பி தம்பிராசாவின் அன்புமனைவியும், சரஸ்வதி சிறிஸ்கந்தராசா,முத்துராசா, யோகராணி சின்னப்பு, பரமானந்தராசா,பாலராசா சௌந்தரிராசாஆகியோரின் அன்புத்தாயாரும்,சபாரத்தினம் சிரோன்மணி, தமிழ்ச்செல்வி, வேலுப்பிள்ளை, பத்மாவதி ஜெயந்தி, றெஜினா, கோபாலகிருஷ்ணசாமி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பின்பு அறியத்தரப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முகவரி.
வேம்படி,
உடுத்துறை,
தாளையடி.

தகவல்:
த.முத்துராசா/மகன்
(TMR)

(4596)

# வீரவணக்கம்

## 04 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 22 * 12 * 1976 |  | 01 * 06 * 2000 |

## பரிசோதகர் ஜெயப்பிரகாஸ்

தமிழீழ காவல்துறை
**நாகேஸ்வரன் ஜெயப்பிரகாஸ்**

நிரந்தரமுகவரி: சாம்பல்தீவு, திருகோணமலை.
தற்காலிகமுகவரி: 01ஆம் வட்டாரம்.புதுக்குடியிருப்பு.

கிளாலிப் பகுதியில் 01.06.2000ஆம் ஆண்டு சிறிலங்கா இராணு வத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கும், இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர் களுக்கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தமிழீழ காவல்துறையினர்.**

(4594)

# ஜி.8 கூட்டமைப்பு நிறைவேற்றிய அரபுலக சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பு

(றியாத்)

**ஜி-8 கூட்டமைப்பு நிறைவேற்றிய அரபுலக சீர்திருத்தம் குறித்து இரண்டு அரபுலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. சவுதி அரேபியாவும், எகிப்துமே தமக்கு இந்தத் தீர்மானத்தில் உடன்பாடில்லை என்று கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன.**

ஜார்ஜியாவில் ஜி-8 மாநாடு நடந்தவேளை அரபுலகம் மற்றும் வடக்கு ஆபிரிக்காவின் சீர்திருத்தம் எனும் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜப்பான், ஜேர்மனி, இத்தாலி, ரஷ்யா, அமெரிக்கா ஆகிய எட்டு நாடுகளின் கூட்டமைப்பான ஜி-8 மாநாட்டில் அரபுலம் மற்றும் வடக்கு ஆபிரிக்க பிராந்தியங்களில் சனநாயக சீர்திருத்தம் அவசியம் எனும் திட்டம் ஒன்றைக்கொண்டு வந்துள்ளன. இந்த திட்டத்திற்கே சவுதி அரேபியாவும், எகிப்தும் கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டுள்ளன.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் அன்னிய நடைமுறைகளைத் திணிப்பதற்கான செயற்பாடே இந்த திட்டம் என்பது சவுதி, எகிப்தின் குற்றச்சாட்டு.

இந்த மாநாட்டில் எகிப்தும், சவுதியும் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அமெரிக்க சனாதிபதி ஜோர்ச்புஷ் இரு நாடுகளையும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு வலியுறுத்திக் கேட்டிருந்தார். ஆனால் இரு நாடுகளும் மறுத்துவிட்டன.

இதேவேளை சமீபத்தில் டொனேசியாவின் தலைநகர் டொவிலில் அரபு லீக் உச்சிமாநாடு நடைபெற்றுள்ளது. இந்த உச்சி மாநாட்டில் அரபுலக சீர்திருத்தம் கொண்ட 13 அம்சத்திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. அரபநாடுகள் தமது சூழலுக்கேற்பவும் தமது வேகத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள முடியும் என்பது அந்த 13 அம்சத் திட்டத்தின் சாராம்சம்.


இந்தத் திட்டத்தை சவுதி அரேபியாவும் எகிப்தும் ஏற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காஸா முனையிலுள்ள இஸ்ரேலியர் 2 மாதங்களுக்குள் வெளியேற வேண்டும்

காஸா முனையிலுள்ள இஸ்ரேலியர்கள் இரண்டு மாதத்திற்குள் அங்கிருந்து வெளியேற வேண்டுமென இஸ்ரேலிய அரசின் நிகழ்ச்சித்திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் சகல இஸ்ரேலியர்களையும் வாபஸ் பெறுவதற்கு ஏரியல் ஷரோனின் நிர்வாகம் தீர்மானித்துள்ளது. தேசிய பாதுகாப்புப் படையினால் தயாரிக்கப்பட்ட இத்திட்டத்திற்கு காஸா முனையிலிருந்து இஸ்ரேலியர்கள் வாபஸ் பெறுவது தொடர்பான வழிகாட்டல் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. காஸா முனையில் வாழ்பவர்கள் தாமாகவே 2005ஆம் ஆண்டளவில் வெளியேறாவிட்டால் அவர்கள் பலஸ்தீன இராணுவத்தினரால் கட்டாயப்படுத்தி வெளியேற்றப்படுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

ஏரியல் ஷரோனின் திட்டத்திற்கமைய காஸா முனையிலுள்ள 21 குடியேற்றத்திட்டங்களிலிருந்தும், மேற்குக்கரையோரப் பகுதியிலுள்ள 120 குடியேற்றத்திட்டங்களில் நான்கிலிருந்து இஸ்ரேலியர்கள் வெளியேறுவது அவசியமெனக் கூறப்பட்டுள்ளது.



ஈராக் பாக்தாத்தில் எரியுண்ட பொலிஸ் வாகனத்திற்கருகில் பொலிஸ் நிலையத்தை பாதுகாத்து நிற்கும் மெக்டி படையினர் ஒருவரும் அவ்விட வாசிகளும்.

# ஈராக்கில் நிலையான ஆட்சி ஏற்பட அமெ.சனாதிபதி புஷ் கோரிக்கை

(பாக்தாத்)

ஈராக் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் நாட்டைக் கட்டமைத்து தேர்தலை நடத்தவும் உதவி தேவைப்படுகின்றது என்பதை ஜி-8 நாடுகள் உணர்ந்துள்ளன.

இவ்வாறு ஜோர்ஜியாவில் நடைபெற்ற ஜி-8 மாநாட்டின் கூட்டத்தில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் புஷ் கூறியுள்ளார்.

ஈராக்கில் நிலையான சனநாயகத்தைக் கொண்டுவருவதற்கு உலகத் தலைவர்கள் உதவி புரிய வேண்டும் என்றும் புஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் வடக்கு அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பான நேட்டோவை விரிவுபடுத்த வேண்டும் என்றும் ஆனால் ஈராக்கில் நேட்டோ பணிபுரியாது என்றும் கூறியுள்ளார்.

ஆனால் நேட்டோ விரிவுபடுத்தலுக்கு பிரான்ஸ் சனாதிபதி ஜக்ஸ் சிராக் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பிரான்ஸ் சனாதிபதியை புஷ் தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.


துருக்கியில் இம்மாத இறுதியில் நேட்டோ உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டிற்கு முன்னர் இந்த அமைப்பை விரிவுபடுத்துவதுபற்றி விவாதிக்க பிரான்ஸ் தயாராக இருப்பதாகவும் பிரான்ஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

நேட்டோ அமைப்பை விரிவுபடுத்த ஜேர்மனி தடையாக இருக்காது என்று கூறிய ஜேர்மனிய சனாதிபதி அதேநேரம் ஈராக்கிற்கு ஜேர்மனி படைகளை அனுப்பாது என்றும் கூறியுள்ளார்.

# ஐ.நா சபைத் தலைவராக ஹபான் அமைச்சர் தெரிவு

(வோஷிங்டன்)

ஐ.நா சபையின் 59ஆவது கூட்டத்தொடர் செப்டெம்பர் 14ஆம் திகதி தொடங்கவுள்ளது. ஐ.நா சபைத் தலைவராக ஹபான் நாட்டின் வெளியுறவு அமைச்சர் லிீங்சிங் முறைப்படி தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதுவரை ஹரபியுத்வ நாட்டின் சென்லூசியாவின் வெளியுறவு அமைச்சர் யூலியான் வுண்டோ நடப்புக் கூட்டத்தொடரின் தலைவராக இருந்தார். ஐ.நா சபையின் தலைவர் பதவியானது சுழற்சி முறையில் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.



மறைந்த முன்னாள் சனாதிபதி றோனால்ட்றீகனது பூதவுடற் பேழையை நோக்கி தமது இறுதி அஞ்சலியை செலுத்த நடந்து வரும் முன்னாள் சனாதிபதி ஜோர்ச்புஷ்சும் அவரது துணைவியார் பாபாறபுஷ்சும் காணப்படுகின்றனர்.

# பிரி.உள்ளூராட்சித் தேர்தலில் தொழிற்கட்சிக்குப் பின்னடைவு

(கொழும்பு)

பிரித்தானியாவில் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான பெறுபேறுகளை நோக்குகின்றவேளை பிரதமர் ரொனிபிளேயரின் தொழிற்கட்சிக்கான ஆதரவு வீழ்ச்சியடைந்து வருவதாக தெரிய வருகிறது.

நேற்று முன்தினம் உள்ளூராட்சி அமைப்புகளுக்கும் ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கும் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக பிரிட்டன் மக்கள் வாக்களித்துள்ளனர். 166 சபைகளில் 72 சபைகளுக்கான பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. தொழிற்கட்சி 191 ஆசனங்களை இழந்துள்ளது. அது மொத்தமாக 400 ஆசனங்களை இழக்கலாமென புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இதேவேளை ஐரோப்பிய பாராளுமன்ற வாக் களிப்பிற்கான பெறுபேறுகள் இன்று வெளியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க-தென்கொரியப்படைகள் வடகொரிய எல்லையில் கூட்டுப்பயிற்சி

(சியோல்)

தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்க கூட்டுப்போர் பயிற்சியொன்றை நேற்று முன்தினம் நடத்தியுள்ளன.

தென்கொரியாவின் தலைநகர் சியோலில் ஹன்நதிக்கரையில் இந்த கூட்டுப்பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. இந்தப்பயிற்சியில் தென்கொரியப் படையினரும், அமெரிக்காவின் படையினரும் இணைந்து கூட்டு பயிற்சியை நடத்தியிருப்பது வடகொரியாவுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வடகொரியாவும், தென்கொரியாவும் கிட்டத்தட்ட தொடர்ந்து 50 வருடங்களுக்கு மேலாக பிரச்சினைகள் மூலம் முரண்பட்டு வருகின்றன.


கம்யூனிஷ நாடான வடகொரியா, தென்கொரியாவுக்கு அச்சுறுத்தல் விடுப்பதுபோல அணுவாயுதத் தயாரிப்பிலும் ஈடுபட்டு வருகின்றது.

இதனால் தென்கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதன்நிமித்தம் தென்கொரியாவின் எல்லையில் அமெரிக்கப் படைகள் நிலைநிறுத்தவும்பட்டுள்ளன.

இதனையடுத்தே நேற்று முன்தினம் இருநாட்டுப் படைகளும் வடகொரிய எல்லையில் கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த கூட்டுப்பயிற்சி தொடர்ந்து ஆக்ரோஷத்துடன் முன்னேறுவது போன்றே நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.



றெக்சாஸில் வட ஸ்பிறிங் பட்டணத்தில் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக மிகப் பெரிய அளவில் நீர் தேங்கி நிற்கும் இடத்திலுள்ள ஒரு சிறிய நிலப்பரப்பில் ஆதரவற்று நிற்கும் காட்சி.



மோப்பநாயின் உதவியுடன் ஆப்கானியர் ஒருவரின் பையைச் சோதனையிடும் பாகிஸ்தான் எல்லைக்காவலாளி

# சட்டம், ஒழுங்கைப் பேணுவதோடு சமூக விடுதலைக்கு

# உழைப்பதும் தமிழீழக் காவல்துறையின் கடமையே

## காவல்பணிமனை திறப்புவிழாவில் பொறுப்பாளர் பா. நடேசன்



(அலுவலக செய்தியாளர்)

எமது விடுதலைப் போராட்டம் உலகில் உள்ள தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு எந்த வகையில் முன் மாதிரியாகத் திகழ்கின்றதோ அதேபோல உலகிலே உள்ள காவல்துறைகளுக்கெல்லாம் முன்மாதிரியான காவல்துறையாக எமது காவல்துறை திகழும் என நான் எதிர்பார்க்கின்றேன் என தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

மன்னார் அடம்பன் பகுதியில் தமிழீழ காவல் பணிமனை திறப்புவிழா நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழீழ காவல்துறையினரின் கடமை சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவது மட்டுமல்ல,எமது மக்களின் சமூக விடுதலை, சமூக மேம்பாடு என்பவற்றுக்கு உழைப்பதும் அவர்களது தலையாய கடமையாகும். அந்தவகையில் எமது தலைமையின் கருத்துக்களுக்கமைவாகத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் சமூக விடுதலைக்காக உழைக்கின்ற பாரிய பொறுப்பையும் அவர்கள் செவ்வனே செய்து வருகின்றனர்.

உண்மையில் எமது விடுதலைப் போராட்டம் சாதாரண ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக இருந்தால், அந்த விடுதலைப் போராட்டத்தின் மூலம் கிடைக்கின்ற சுதந்திரம் சகல மக்களையும் சென்றடைய வேண்டுமானால் சமகாலத்திலே சமூகவிடுதலைக்கான போராட்டமும் இடம்பெற வேண்டும். சமூக விடுதலை எனும் போது பெறப்படுகின்ற விடுதலை எவ்வித வேறுபாடுகளும், பாகுபாடுகளும் இல்லாமல் சுதந்திர உரிமை அனைவரையும் சென்றடைய வேண்டும்.

இதனால் தான் காவல்துறை ஆரம்பிக்கப்பட்ட போது தலைவர் அவர்கள் என்னை அழைத்து இந்தக் காவல்துறை செயற்படும் போது "இது ஒரு விடுதலைக்காகப்போராடுகின்ற மக்களினுடைய அபிலாசைகளைப் பிரதிபலிக்கின்ற காவல் துறையாக இருக்கவேண்டும். ஏனைய நாட்டு காவல்துறைகள் போலல்லாது சமூகவிடுதலைக்காக உழைக்கின்ற காவல் துறையாகவும் இருக்க வேண்டும்" எனக் கூறியிருந்தார்.

தமிழீழ காவல்துறையின் செயறபாடுகள் எப்படி அமைய வேண்டும் எனத் தலைவர் அவர்கள் பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் தெளிவாக வலியுறுத்திக் கூறியிருந்தார். அதுமட்டுமன்றி அவ்வப்போது அதன் செயற்பாடுகள் பற்றி எனக்குத் தெளிவுபடுத்திக் கூறுவார். இதனடிப்படையில் தான் இன்று பதின்மூன்று வருட காலப்பணியில் தமிழீழக் காவல் துறை எமது மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் மிகவும் சிறப்பான முறையில் சேவையாற்றி வருகின்றது.

உலகத்தின் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள், பல அமைப்புக்களையும், நிறுவனங்களையும் சேர்ந்தவர்கள், ஏன் எம்மீது அடக்குமுறையைத் திணிக்கின்ற பேரினவாத அரசைச் சேர்ந்தவர்கள் கூடத் தமிழீழ காவல்துறையின் திறமையான செயற்பாட்டைப் பாராட்டும் அளவிற்கு எமது காவல் துறை செயற்பட்டு வருகின்றது என்றால் அதற்கான பிரதான காரணம் எமது தலைவரின் நுட்பமான வழி நடத்தலும், காவல்துறை உறுப்பினர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய அதீத செயற்பாடுமேயாகும்.

தேசிய விடுதலைப் போராட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற எமது தலைவர் அவர்கள் சமகாலத்திலே காவல்துறை போன்ற பல அமைப்புக்களையும் , நிறுவனங்களையும் உருவாக்கினார். அவை இந்த சமூக விடுதலைக்கான பங்களிப்பில் அர்ப்பணிப்புடன் பங்காற்றி வருவதனால் தான் எமது மக்கள் சுதந்திரமாக எவ்வித அச்சமும் இன்றி உலாவக் கூடிய சூழல் உருவாகியிருக்கிறது.

தமிழீழக் காவல்துறை பல்வேறுபட்ட தரப்பினராலும் இன்று புகழப்படுவதற்கான காரணங்கள் பல உள்ளன. தமிழீழக் காவல்துறை உறுப்பினர்கள் ஏனைய தேசத்துக் காவல்துறை உறுப்பினர்களைப் போன்றவர்கள் அல்ல. விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு மக்கள் சமூகத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள். இவர்கள் எமது மக்களினுடைய துன்பங்கள், துயரங்கள், சோகங்கள் நிறைந்த அனுபவங்களைப் பெற்று அதே சமூகத்திலிருந்து வந்து பணியாற்றுபவர்கள். இதனால் மக்களினுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கமைவாகத் தம்மைப் பல வழிகளிலும் அர்ப்பணித்து செயலாற்றுகிறார்கள். ஏனைய தேசத்து காவல்துறையினரைப் போல மது பாவித்தல், புகைத்தல், பக்கச் சார்பான முறையில் செயற்படுதல், இலஞ்சம் வாங்குதல் போன்றவை இல்லாது எமது இயக்கத்தின் புனிதத்துவக் கொள்கைக்கு ஏற்ப தம்மையும் அர்ப்பணித்துச் செயற்படுவதால்தான் எம்மால் வெற்றிகரமாக இந்தக் காவல்துறையை நடத்தக் கூடியவாறு இருக்கிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சிறிலங்கா காவல்துறையினர் குற்றச் செயல்களை ஊக்குவித்து, சமூகச் சீரழிவு நிலையை உருவாக்க எவ்வாறு செயற்பட்டு வருகின்றார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். இன்று யாழ்ப்பாண இளம் சமுகத்திடம் தீய பழக்க வழக்கங்களை ஊட்டி அவர்களைத் தீய வழியில் திசை திருப்பும் வகையில் அவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

சிறிலங்காவில் சட்டம், ஒழுங்கு அனைத்துமே சீர்குலைந்த நிலையில்தான் இருக்கிறது. பாராளுமன்றத்திற்குள் மக்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுச் செல்கின்ற சமயத் துறவிக்கே பாதுகாப்பற்ற நிலை. முழு உலகமுமே சிறிலங்காவின் சட்டத்துறையையும், நீதி மன்றத்தையும் ஏளனமாகப் பார்த்து எள்ளி நகையாடுகின்ற நிலைமை உருவாகியிருக்கிறது.

இந்த நிலையில், எமது தாயகப் பிரதேசத்தில் உள்ள எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மிகவும் கட்டுக் கோப்பு மிகுந்த காவல்துறை அமைப்பு செயற்படுகிறது. விடுவிக்கப்பட்ட [illegible]தேசங்களில் படிப்படியாக எமது மக்களுக்கு காவ[illegible]றயினர் பணி புரிந்து வருகின்றார்கள். இன்று எம[illegible]ர்ச்சிக்கு மக்களின் பங்களிப்பு முக்கிய விடயமாக உ[illegible] மக்களின் ஒத்துழைப்பு எம்மை மேலும் ப[illegible]ந்திச் செல்கிறது. இன்று சிங்கள தேசத்தில் எவருக்[illegible] பாதுகாப்பு இல்லாத நிலை தோன்றியுள்ளது. [illegible]லையில் எமது போராட்டத்தின் நியாயத் தன்மைகளை முழு உலகமும் புரிந்து கொண்டிருக்கிறது. இது எமக்கு மகிழ்வைத் தருகிறது. இத்தகைய சூழலில் அடம்பன் பிரதேச மக்கள் எதிர்பார்க்கும் வகையில் எமது உறுப்பினர்கள் செயற்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

(லோ, தீ)

# முல்லை. மாவட்ட கமக்கார சம்மேளனம் அங்குரார்ப்பணம்

முல்லை.மாவட்டத்தின் கமக்காரர்களுக்கான மாவட்ட சம்மேளனம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. க. தர்மலிங்கம் தலைமையில் கடந்த புதன்கிழமை அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

ஆணையாளர் தனது தலைமையுரையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் கமக்காரர் அமைப்புக்களின் வளர்ச்சியினை அறிக்கையாகச் சமர்ப்பித்து கருத்துக் கூறினார். அத்துடன் கமக்கார அமைப்பின் முக்கியத்துவம், அதன் செயற்பாடு, எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் எனத் தெளிவாக எடுத்துக் கூறியதோடு, தொடர்ந்து நீர்ப்பாசனத் திட்டப் பணிப்பாளர், உதவி விவசாயப் பணிப்பாளர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்டப் பொறுப்பாளர் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினார்கள்.

சிறப்புரைகளைத் தொடர்ந்து நடைமுறை விதி அங்கீகரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தலைவராக திரு. ச. சிவானந்தம், செயலாளராக திரு. மி. அந்தோனிப்பிள்ளை, பொருளாளராக திரு. க. செபமாலைமுத்து ஆகியோர் உட்பட 11 உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து இக்குழுவினர் கமக்கார அமைப்பின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக செயற்படுவோம் எனத் தெரிவித்தனர். (20)

# சுதந்திரபுரத்தில் இடம்பெற்ற நினைவு கூரல் நிகழ்வு


(புதுக்குடியிருப்பு)


புதுக்குடியிருப்பு-சுதந்திரபுரம் பகுதியில் 1998.06.10 அன்று சிறிலங்கா அரசினால் நடாத்தப்பட்ட படுகொலையின் நினைவு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது சுதந்திரபுரக் கிராம உத்தியோகத்தர் தலைமையில் அப்பகுதியில் அமைந்துள்ள மாவீரர் படிப்பகத்திற்கு அருகாமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொதுச்சுடரினை புதுக்குடியிருப்பு பிரதேசச் செயலர் தயானந்தா அவர்கள் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை முல்லை.மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் ஏற்றிவைத்தார். லெப்ரினன்ட் கேணல் அன்பு(அம்மா)அண்ணையின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை உடையார்கட்டு மகாவித்தியாலய முதல்வர் ராஜா ஏற்றிவைத்தார்.

கொல்லப்பட்ட 24அப்பாவிப் பொதுமக்களுக்குமான சுடர்களை உடையார்கட்டு தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் ஏற்றி வைத்தனர். பொதுப்படத்திற்கான மலர்மாலையினை உடையார்கட்டு வள்ளிபுனம் வலயப்பொறுப்பாளர் அணிவித்தார்.


அகவணக்கத்துடன் நினைவுரையினை உடையார்கட்டு கிராம சேவையாளர் செல்வநாயகம்,எழுச்சிப் பேரவை உறுப்பினர் விஜயகுமார், அப்பிரதேசப் பாடசாலை அதிபர்கள், முல்லை. மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் ஆகியோர் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.





தமீழீழக் காவல்துறையின் அடம்பன் காவல்பணிமனைத் திறப்பு விழா நிகழ்வில்....

# முன்பள்ளிச் சிறார்களின் கற்றல் வட்டக் கண்காட்சி



(அலுவலக செய்தியாளர்)

இலுப்பைக்கடவை றூபி முன்பள்ளி சிறார்களின் கற்றல் வட்டக்கண்காட்சி நேற்று முன்தினம் இலுப்பைக் கடவை மீனவர் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இக்கண்காணட்சி நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையமும் இணைந்து நடாத்துகிறது.

றூபி முன்பள்ளி ஆசிரியை திருமதி. புண்ணியசீலன் கிறிஸ்தம்மா தலைமையில் ஆரம்பமான இக்கண்காட்சி நிகழ்வில் மங்கல விளக்கினை மாந்தை மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கணக்காளர் திருமதி. பாவுடுகெல ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ காவல்துறையின் இலுப்பைக் கடவைப் பணிமனைப் பொறுப்பாளர் லோகேஸ் ஏற்றிவைத்தார். றூபி முன்பள்ளிக் கொடியை முன்பள்ளி ஆசிரியர் திருமதி. புண்ணியசீலன் கிறிஸ்தம்மா ஏற்றினார்.

மேற்படி முன்பள்ளியில் 35 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இத்தகைய கண்காட்சி நடத்தப்படுவதன் மூலம் முன்பள்ளிச் சிறார்களின் திறமையை அதிகரிக்க முடியும் எனவும் இந்த முன்பள்ளியில் கற்கின்ற சிறார்களினாலேயே இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பொருட்கள் அனைத்தும் உருவாக்கப்பட்டது எனவும் மேற்படி கண்காட்சி தொடர்பாக மேற்படி முன்பள்ளி ஆசிரியர் கருத்துத் தெரிவித்தார்.

(லோ, தீ)

# இடம்பெயர்ந்தவர்களின் விபரங்களை மீண்டும் சமர்ப்பிக்க படையினர் பணிப்பு

## – உசன், கரம்பகம், எழுதுமட்டுவாள் மக்கள் அச்சம்

**தென்மராட்சியின் முன்னரங்கப்பகுதிகளான உசன், கரம்பகம் மற்றும் எழுதுமட்டுவாள் போன்ற பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ள குடும்பங்கள் தொடர்பான விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு படையினர் கோரியுள்ளனர். இதனையடுத்து அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அச்சமடைந்துள்ளனர்.**

இடம்பெயர்ந்த குடும்பங்கள் தற்போது வசித்துவரும் முகவரிகள் தொடர்பான விபரங்களை முழுமையாகத் திரட்டித் தம்மிடம் சமர்ப்பிக்குமாறே படையதிகாரிகள் கோரியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு நேரில் விஜயம் செய்த இராணுவத்தின் 55ஆவது படைப்பிரிவின் அதிகாரிகள் கிராமசேவையாளர்களுக்கு நடாத்திய கூட்டத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

எனினும் யாழ்.மாவட்ட படைத் தலைமை யாழ்.அரச அதிபர் ஊடாக இவ்வாறானதோர் கோரிக்கையினை அண்மையில் முன்வைத்திருந்ததையடுத்து அனைத்து பிரதேச செயலகம் மற்றும் உதவி அரச அதிபர் அலுவலகங்கள் ஊடாக இத்தகவல்கள் திரட்டப்பட்டு அரச அதிபர் ஊடாகப் படைத்தலைமையிடம் கையளிக்கப்பட்டுவிட்டது.

இந்நிலையில் மீண்டும் குறித்த பகுதிகளை ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ள படையினரால் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டமையானது இடம்பெயர்ந்த மக்களிடையே அச்சநிலையை உருவாக்கியுள்ளது. (27)

# குருநகர் பொது நூலகம் இயங்க ஆரம்பம்

யாழ். குருநகர் பொது நூலகம் நீண்ட காலத்தின் பின் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட நிலையில் நீண்டகாலமாக மேற்படி நூலகம் இயங்காதிருந்தது.

இதனால் அப்பகுதி மக்கள் எதிர்கொண்டுவரும் பின்னடைவுகளைப் பலரும் சுட்டிக்காட்டி வந்ததைத் தொடர்ந்து யாழ்.மாநகரசபை அதனை இயக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து அதனை இயங்கவைத்துள்ளது. எனினும் இங்கு நூலகத்திற்குரிய அடிப்படை வசதிகள் காணப்படாமையால் பணியாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (33)

# சீரற்ற நிலையிலுள்ள விபுலானந்தர் வீதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொழும்புத் துறையில் உள்ள விபுலானந்தர் வீதி நீண்டகாலமாக புனரமைப்புக்கள் ஏதும் இன்றி சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

இதனால் இவ்வீதியூடாகப் பயணிப்போர்பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வீதியின் சீரற்ற தன்மைகள் குறித்து யாழ்.மாநகர சபை, வீதி அபிவிருத்தி சபை, ஆகியவற்றிடம் இப்பகுதி மக்கள் முறையிட்டும் கூட உரிய நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை. (33)

# அடிப்படை வசதியற்று இயங்கும் நெடுந்தீவு வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகப்பகுதியில் உள்ள நெடுந்தீவு வைத்தியசாலை அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே இயங்கிவருவதாக தெரியவருகிறது.

நெடுந்தீவுப்பகுதியில் கடந்த காலங்களில் ஏற்பட்ட இராணுவ ஆக்கிரமிப்புக்களால் இடம் பெயர்ந்த மக்கள் தற்பொழுது படிப்படியாக அங்கு சென்று மீளக் குடியமரத்தொடங்கியுள்ளனர். ஆனால் இங்கு மீளக்குடியமரத்திரும்புவோர் தொகைக்கு ஈடுகொடுத்து வைத்திய சேவையை வழங்கக் கூடிய வசதிகள் இங்கு காணப்படவில்லை.

குறிப்பாக இவ்வைத்தியசாலைக்கு என அனுப்பப்படும் மருத்துவப் பொருட்கள் போதாதிருப்பதுடன் இவ்வைத்தியசாலையில் தளபாடப் பற்றாக்குறை, உபகரணப்பற்றாக்குறை, மருத்துவர்கள் பற்றாக்குறை என்பனவும் நிலவுகின்றன. இதனால் இப்பகுதி மக்கள் தமது வைத்திய தேவைகளை திருப்திகரமாக நிறைவேற்ற முடியாது பலத்த அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர். (33)

# நெடுந்தீவு அஞ்சலகக் கட்டடத்தில் கடற்படை முகாம் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம் நெடுந்தீவில் உள்ள அஞ்சலகக் கட்டடத்தில் சிறிலங்கா கடற்படையினர் முகாம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். நேற்று சிறிலங்காத் தலைநகர் கொழும்பிலிருந்து கடற்படை அதிகாரிகள் நெடுந்தீவு அஞ்சலகத்திற்கு சென்று அஞ்சல் அதிபரிடம் அஞ்சலகத்தின் அருகாக இருக்கும் அவர்களுக்குரிய கட்டடத்தில் முகாம் அமைக்கப்போவதாக கூறினர். இதற்கு அஞ்சலதிபர் தாம் மேலிட உத்தரவின்றி அனுமதி தரமுடியாது எனக்கூறினார். அதற்கு கடற்படை அதிகாரி கொழும்பு அதிகாரிகளின் அனுமதி இருப்பதாக கூறி, எப்படியும் அக்கட்டடத்தைப் பெற்று விட முயன்றபோதும், அஞ்சலக அதிபர் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார். இந்நிலையில் அவர் தன் மேலதிகாரிகளுக்கு இதுகுறித்து அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது. நெடுந்தீவில் மக்களின் கடும் எதிர்ப்புகளின் மத்தியில் மக்களுடன் போர் நடத்தியே சிறிலங்கா கடற்படையினரும் ஈ.பி.டி.பி. குழுவினரும் அங்கு முகாம் அமைத்துள்ளனர். இதன் ஒரு கட்டமாக இப்பொழுது தங்களது பகுதிகளை அவர்கள் விரிவாக்க முயல்கின்றனர்.

# 8 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேர் ஊர்திரும்பினர்

(மன்னார்)

மன்னார் இலந்தை மோட்டை என்ற கிராமத்தில் வசித்து வந்த ஆறு குடும்பத்தைச் சேர்ந்த 27 பேர் நேற்று முன்தினம் தமது சொந்த இடமான யாழ். சுழிபுரம் போய்ச்சேர்ந்துள்ளனர். இதேபோல் பேசாலை அகதிமுகாமில் வசித்த 2குடும்பங்களைச் சேர்ந்த 8பேர் தமது சொந்த இடமான யாழ்.மண்டதீவுக்குச் சென்றுள்ளனர். 14 வருடத்திற்கு பிறகு செல்லும் இவர்களுக்குரிய பயண ஒழுங்குகளை மன்னார் நகர பிரதேச செயலாளர் ஆர்.ஹதீஸ்வரன் செய்துகொடுத்தார். (மி)

# யாழ். கல்விப்பணிப்பாளர்களுக்கு கிளிநொச்சியில் கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களையும் சேர்ந்த பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுக்கான சந்திப்பொன்று எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சியில் இடம் பெறவுள்ளது.

கல்வி மேம்பாட்டுக்கான திட்டங்களை வகுத்தல், வலயங்களுக்கிடையேயான நிர்வாகக்கட்டமைப்பில் சீர்திருத்தங்களைக் கொண்டுவரல் நிதிப்பயன்பாடு மற்றும் இவ்வாண்டில் முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாக ஆராயும் பொருட்டே இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.

தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் தலைமையில் கிளிநொச்சியிலுள்ள அதன் தலைமையகத்தில் இச்சந் திப்பு இடம்பெறவுள்ளது.

வலயக்கல்விப் பணிப்பாளர்களுடன், அவ்வவ் வலயங்களைச் சேர்ந்த நிர்வாக திட்டமிடல் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோருடன் இலங்கை தமிழர் ஆசிரியச் சங்கப்பிரதிநிதிகளும் இச்சந்திப்பிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன. (27)

# வீதி விபத்தில் இளைஞன் காயம்

யாழ். இராச வீதியில் நேற்று முன்தினம் மாலை மோட்டார் சைக்கிளும், ஆட்டோவும் ஒன்றை ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார். கல்வியங்காட்டைச் சேர்ந்த ஞானகுமார் (வயது26) என்பவரே காயமடைந்தவராவார். மேற்படி வீதிவழியாக வந்து கொண்டிருந்த ஆட்டோ ஒன்று வேகக்கட்டுப்பாட்டை மீறி எதிரே வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளை மோதியதில் அதனை ஓட்டி வந்தவரே காயமடைந்துள்ளார். (33)

# மறவன்புலவு மக்கள்மீது இராணுவம் கெடுபிடி

தென்மராட்சி மறவன்புலவு மேற்குப் பகுதியில் அதிஉயர் பாதுகாப்பு வலயம் அமைத்து நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் அப்பகுதியில் மீளக்குடியேறி வாழும் மக்கள் மீது பல்வேறு கெடுபிடிகளை பிரயோகித்து வருகின்றனர். அண்மையில் இப்பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களிடம் அவர்களது குடும்பப் படத்தை வீட்டின் முகப்பில் தமது பார்வைக்காக வைக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ள படையினர், இப்பகுதி மக்கள் இரவு 9.00 மணிக்குப் பின் மறவன்புலவு மேற்கு எல்லையில் இருக்கும் தமது காவலரணைத் தாண்டிச் செல்லக் கூடாது எனவும் உத்தரவிட்டுள்ளனர். இதேவேளை, இந்நேரத்தின்பின் இங்கு வசிப்போரோ அல்லது வெளியாரோ எவரும் இந்த எல்லையைத் தாண்டி மறவன்புலவு மேற்குப் பகுதிக்குள் நுழைய முடியாது எனவும் கண்டிப்பான உத்தரவிட் டுள்ளனர். அத்துடன் வெளியார் எவராவது காலையிலிருந்து இரவு 9 மணிக்குள் இப்பகுதிக்கு வரவேண்டிய தேவை இருந்தால் 3 நாட்களுக்கு முன் தம்மிடம் தெரிவித்து அனுமதி பெற வேண்டும் என்ற புதிய நிபந்தனையையும் படையினர் விடுத்துள்ளனர். நாளாந்தம் மாலை 6 மணிக்குப் பின்னர் மக்களின் வசிப்பிடங்களுக்குள் அத்துமீறி நுழையும் படையினர் குடும்பத்தில் உள்ளோரை பார்வையிடுவதுடன் புதியவர்கள் யாராவது உள்ளனரா என்பதை அறிவதிலும் தீவிரமாக ஈடுபடுகின்றனர். இதேவேளை, இரவு நேரத்தில் ரோந்து நடவடிக்கையிலும் படையினர் ஈடுபடுகின்றனர். படையினரின் இந்நடவடிக்கைகள் காரணமாக இங்குவாழும் மக்கள் அச்சமடைந்துள்ளதுடன், இரவு நேரத்தில் யாருக்காவது திடீர் சுகவீனம் ஏற்பட்டால் மருத்துவமனைக்கு நோயாளர்களைக் கூட்டிச் செல்வது பற்றியும் செய்வதறியாது விசனமடைந்துள்ளனர்.

### கூட்டம்

நியாப் II திட்டத்தின் கீழ் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான கிராமங்களைத் தெரிவுசெய்வதற்கான விசேட கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம் பெறும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு எழுச்சிப்பேரவை, கிராம முன்னேற்றச்சங்கங்கள், கடற்றொழிலாளர் சங்கங்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள், ஊடகவியலாளர் சங்கங்கள், அரசசார்பற்ற அமைப்புக்க ளின் ஒன்றியம் என்பவற்றின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 10.மணிக்கு இக் கூட்டம இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. (27)

# விபுலானந்த அடிகளாரின் நினைவுதினம் அனுஷ்டிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் அடுத்த மாதம் (ஜூலை) 19ஆம் திகதி தமிழ்ப் பெரியார் விபுலானந்த அடிகளாரின் நினைவுதினம் அனுஷ்டிக்கப்படல் வேண்டும் என கல்வித திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதற்கமைவாக யாழில் உள்ள சகல பாடசாலைகளிலும் கலை நிகழ்வுகள், சிறப்பான விழாக்கள் என்பன நிகழ்த்தப்படல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாழ்ந்து மறைந்த தமிழ்ப் பெரியார்களின் சிறப்பினையும் அவர்களின் வழிகாட்டலிலுள்ள மேன்மைகளையும் மாணவர்கள் உணர்ந்து கொள்வதற்காகவே இத்தகைய விழாக்கள் பாடசாலை மட்டங்களில் நடத்தப்படல் வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டு வருகிறது. (33)

# ஆசிரியர் சேவைக்கான போட்டிப் பரீட்சை

கல்விப்பொதுத்தராதர உயர் தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையினை யாழ். மாவட்டத்திலும் நடாத்த அரசு முன் வந்துள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளரிற்கு பரீட்சைத் திணைக்களம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

முன்னதாக இப்போட்டிப் பரீட்சை கொழும்பிலேயே நடாத்தப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் யாழ்.குடா நாட்டிலிருந்து ஆறாயிரத்திற்கும் அதிகமானவர்கள் விண்ணப்பித்திருக்கின்றனர்.

தமிழர் ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட பல கல்விசார் அமைப்புக்கள் தொடர்ச்சியாக விடுத்து வந்த கோரிக்கையினையடுத்தே தற்போது யாழ்.மாவட்டத்திலும் பரீட்சையினை நடாத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (27)

# கண்காட்சிப்போட்டி

வடமராட்சி முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டுப்பேரவையின் கண்காட்சிப்போட்டி எதிர்வரும் 19,20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டுப்பேரவையில் நடைபெறவுள்ள இக்காட்சிப் போட்டிகளில் வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள பல முன்பள்ளிகளினதும் ஆக்கங்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.(33)

# மிதிவெடி அகற்றும் பணி உரும்பிராயில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மருதனார்மடம் வீதிப்பகுதிகளிலுள்ள விவசாயக் காணிகளிலிருந்து மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை "கலோட்றெஸ்" வெடிபொருள் அகற்றும் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின்போது மேற்படி பகுதிகளில் படையினரால் புதைத்து வைக்கப்பட்ட மிதிவெடிகள் அகற்றப்படாததனால் அப்பகுதியிலுள்ள பல ஏக்கர்க்கணக்கான விவசாய நிலங்கள் செய்கை பண்ணப்படாது இருப்பதனால் அப்பிரதேச விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி, அப்பிரதேச விவசாயிகள் சம்மேளனத்தினரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்கவே தற்பொழுது அங்கு மிதிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுவரும் மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகளால் ஏராளமான விவசாயிகள் பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (33)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# கண்ணிவெடி அகற்றும் பணியில் தேனீக்களை ஈடுபடுத்த முடியும்

உலகம் பூராவும் தேசங்களுக்கு இடையேயும், உள்ளேயும் நடைபெறும் யுத்தங்கள் காரணமாக எதிரியை அழிப்பதற்கென தூவப்பட்டுள்ள கண்ணிவெடிகளின் மொத்தத் தொகை 110 மில்லியனையும் தாண்டியுள்ளது என ஐ.நா.சபை அறிவித்துள்ளது.

வருடந்தோறும் கண்ணி வெடிகளுக்குள் சிக்கி உயிரிழப்போர் அல்லது, படுகாயங்களுக்கு உள்ளாவோர் தொகை மட்டும் சர்வதேசரீதியாக 26,000இறகும் அதிகம் எனக் கூறும் ஐ.நா.சபை, கண்ணிவெடி அகற்றும் பணியில் புதிய வியூகம் அமைத்துச் செயற்பட ஒவ்வொரு அரசும் அக்கறை காட்டவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் மொன்டானா பல்கலைக்கழக ஆராய்ச்சிக்குழுவினர் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் தேனீக்களை ஈடுபடுத்தும் நடவடிக்கையில் முனைப்புக்காட்டி வருவதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி இது வெற்றிகரமாக செயற்படுத்தப்படும் காரியமாகும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாராட்சிக் குழுவின் தலைவரான பேராசிரியர் "ஜேரி புரோமன் சேன்க்" கடந்த 30 வருடகாலமாக விலங்குகளின் மோப்ப சக்தியை ஆராய்ந்து வருபவர்.

தேனீக்கள் நாய்களை விடவும் சிறப்பாக கண்ணிவெடித் தேடுதலை மேற்கொள்ளும் சக்தி படைத்தவை என அவர் கூறுகின்றார்.

அத்துடன் நாய்களை விடவும் வேகமாகவும், நுணுக்கமாகவும் செயலாற்றும் தன்மை தேனீக்களுக்கு இருப்பதாகவும் ஜேரி மேலும் தெரிவித்துள்ளார்.

## தெரிந்து கொள்க

*முதன் முதல் பீசல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த டீசல் என்பவராவார். இவர் 1895 ஆம் ஆண்டு இதனைக் கண்டறிந்தார்.

*"பாகிஸ்தான்" என்ற சொல் பஞ்சாப், ஆப்கான், காஷமீர், சிந்து, பலுசிஸ்தான் என்ற அரபிய மாநிலங்களின் ஆங்கில முதலெழுத் துக்களில் இருந்து பிறந்ததாகும். இச் சொல்லினை முதன் முதலில் இந்திய முஸ்லிம் லீக் அறிமுகப்படுத்தியது.

*நம்பமுடியுமா? உணவில்லாமல் பாம்பு 25 மாதங்களும், தவளை 16 மாதங்களும், மூட்டைப் பூச்சி 6 மாதங்களும் உயிர் வாழும்.

*உலகில் முதன் முதல் அச்சிட்டு வெளியிடப்பட்ட நூல் டிமோன் சுட்ரா என்பதாகும். இது 1868 ஆம் ஆண்டு சீனாவில் வெளியிடப்பட்டதாகும்.

*கண்ட நகர்வானது வருடத்திற்கு 2.5 சென்ரி மீற்றர் அளவில் இடம் பெறுகின்றது. இது எமது கைவிரல் நகத்தின் வளர்ச்சி வீதத்திற்கு சமமானதாகும்.

*இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது தான் முதன் முதல் யுத்தகளத்தில் விமானம் பயன்படுத்தப்பட்டது. ரெப்பரோன் என்ற விமானத்தை ஜேர்மனி பாவித்தது.

*முதன் முதல் 1510 ஆம் ஆண்டு ஆபிரிக்க மக்கள் அடிமைகளாக கடல் வழியாக கரிபியன் தீவுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.

## அக்குபஞ்சர் சிகிச்சை

அக்கு பஞ்சர் வைத்திய சிகிச்சை முறையால் தலையிடி போன்ற நோய்கள் முற்றாகக் குணமடையுமென அமெரிக்க மருத்துவ பரிசோதகர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த வைத்திய முறையால் இங்கிலாந்து வேல்ஸ் நகரைச் சேர்ந்த 401 நோயாளர்கள் குணமடைந்துள்ளனர் என பேராசிரியர் அன்று விக்கர்ஸ் தெரிவித்துள்ளார். இவ் வைத்திய முறையினால் எவ்வித பாதிப்பும் ஏற்படாதெனவும் கூறப்படுகிறது. 2000வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட இவ் வைத்தியமுறை தற்போது உலகம் முழுவதும் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## குளோபல் எலக்ரிக்கல் மோட்டார்

படத்தில் உள்ள வாகனத்தின் பெயர் ஜெம் குளொபல் எலக்ட்ரிகல் மோட்டார் என்பதன் சுருக்கம்தான் இந்த ஜெம் மின்சாரத்தில் இயங்கக் கூடிய இந்த வாகனம் சத்தமில்லாமல் ஓடக்கூடியது. அமெரிக்காவில் உள்ள சீஜலண்டு பகுதியில் ஜி-8 நாட்டுத் தலைவர்களுக்கான இரவு விருந்து நடந்தது. அதில் பங்கேற்கத்தான் அமெரிக்க சனாதிபதி புஷ் இந்த வித்தியாசமான வாகனத்தில் வருகிறார். படத்தில் அதை காணலாம்.




## மிகச்சிறிய புகைப்படக் கருவி

மிகச் சிறிய கலர் புகைப்படக் கருவி ஒரு தபால் முத்திரையை விட சிறியதான இப்புகைப் படக்கருவி கடத்தும் திறன், நியமநேரம், 300 அடிக்குட்பட்ட, ரீ.விக்குரிய முழுகலர் வீடியோ என்பவற்றைக் கொண்டுள்ளது.

2.4 GHZ வலுவுடைய நிறப் பிரிகையினால் ஏற்படும் நிறமாலையைக் கடத்துவதுடன், சுவர்கள், தரைகள் ஊடாக பளிங்கு போன்ற தூய்மையான கற்பனைகளை உருவாக்கி விடும்.

ரீ.வி அல்லது வீ.சீ.ஆர் இற்கு 2.4 GH கேட்கும் கருவி (ரிசீவர்) இப் புகைப் படக்கருவியுடன் இணைக் கப்பட்டிருக்கிறது.

சோடித் தாயக்கட்டையை விடச் சிறியதான இக்கருவி 300 அடிவரை கடத்தும் திறன் கொண்டது.



சுவர்கள், தரைகளின் ஊடாக கடத்துகிறது. 2.4 GHZ கடத்தலின் மூலம் படம் சிறந்ததாகவும் தெளிவாகவும் அமையும்.

## ஒரங்ஒட்டாங் குரங்கினம் பற்றி

சுமத்ரா, போணியோ தீவுகளிலுள்ள காடுகளில் வாழும் ஒரங்-ஒட்டாங் இன வானரங்கள் பற்றி ஆய்வு நடத்திய டியூக் பல்கலைக்கழக விலங்கியல் விஞ்ஞானியான காரெல்வான் என்பவரும் உதவியாளர்களும் வெளியிட்டுள்ள தகவல்களின் மேற்படி குரங்கினங்களின் வியத்தகு செயற்பாடுகள் பற்றி அறிவித்துள்ளனர்.

அதன்படி ஒரங்ஒட்டாங், கிபன்கிம்பஞ்சி, கொரில்லா போன்ற உயர் வகை இனங்கள் பொங்கிபே இனத்தைச் சேர்ந்தவை எனவும், இவற்றுள் ஒரங் ஒட்டாங் மரங்களில் வாழ்க்கை நடத்துவன எனவும், தெரிவிக்கப்படுகிறது. இவ்வினத்தைச் சேர்ந்த மேலும் பல பிரிவுகள் இருப்பதாக அறிவிக்கும் விஞ்ஞானிகள் மனிதனும் உயர்வகை குரங்கினங்களும் இவற்றின் வழித்தோன்றல்களாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கின்றனர்.



இவை மரங்களில் தாவித் திரியும்போது ஏனைய வகைகளைப் போல் நான்கு கால்களால் அன்றி இருகால்களினாலேயே நடந்து செல்கின்றன. குறிப்பாக சாப்பிடுதல், இருத்தல், நடமாடுதல் போன்ற செயற்பாடுகள் மனிதர்களைப் போன்றே காணப் படுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

சில உருவ ஒற்றுமையில் மந்தி இனத்தை ஒத்ததாகக் காணப்படினும் தலையின் உரோமம், முகம், மூக்கின் வடிவம் என்பவற்றில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இவை மரஉச்சியில் காய்ந்த இலைகள் சருகுகளைக் கொண்டு தமக்கான இருப்பிடத்தை அமைத்துக் கொள்கின்றன என மேற்படி விஞ்ஞானியான காரெல் சேன் ஷாயிக் தெரிவிக்கிறார். இவர் தலைமையிலான ஆய்வுக் குழு ஒன்று தாம் போர்னியா, சுமாத்ராதீவுக் காடுகளில் பலவருடங்களாக ஆய்வு நடத்தியிருப்பதாக கூறுகின்றனர்.

ஒரங்ஒட்டாங் இனத்தின் கர்ப்பகாலம் 270 நாட்கள் என்றும், கொரில்லா இனத்தின் கர்ப்பகாலம் 245 நாட்கள் எனவும், சிம்பன்சி இனத்தின் கர்ப்பகாலம் 260 நாட்கள் எனவும் கண்டறியப் பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

காட்டில் பழங்கள் அதிகமாக இருக்கும் காலங்களில் அதிக கலோரியுள்ள பழங்களைத் தெரிவு செய்து உண்ணும்திறன் படைத்த ஒரங்ஒட்டாங் இன ஆண்குரங்கின் உயரம் 4.5 அடியாகும் எனவும், நிறை ஏறக்குறைய நூறு கிலோ ஆகும் எனவும் ஆய்வுகளில் தெரிவிக்கப்படுகிறது.

### கீ போட் இல்லாத கணினி

ஜப்பானின் சொனி நிறுவனம் உலகிலேயே மிகச்சிறியதும் இலேசானதுமான "வாயிஓ (VAIO) யூ" எனப்படும் கணினி இயந்திரம் ஒன்றை உருவாக்கியுள்ளது. கீ போட் இல்லாத இதன் நிறை 550 கிராம்களே.

விரைவில் சொனி நிறுவனத்தால் சந்தையில் விடப்பட்டுள்ள இதன் விலை 180000 யென்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.



## தகவல் சேமிப்புக் கடிகாரம்



மனித உழைப்பைக் குறைக்கும் உலகு, விலை குறைவான தகவல் சேமிப்புக் கடிகாரத்தையும் கண்டு பிடித்துள்ளது. இக் கடிகாரமானது நீங்கள் சேகரித்து வைத்த ஐந்நூறு தரவுகளை 8 எம்.பி.யில் ஞாபகப்படுத்தி வைத்திருக்கும்.

இது செப்பனிடும் நிலையத்தின் மார்க்கமாக பி.சி.யுடன் இணைக்கப்பட்டுள்ளது. தரவுகளையும் நிரல்களையும் வெளியிடுவதற்காகவே இவ்வாறு இணைக்கப் பட்டுள்ளது.

இது நிச்சயமாக நேரமும் காட்டும்.

### படம் பிடிக்கும் பேனா



டிஜிரல் கமராப் பேனை 2 எம்.பி.கொள்ளவில் 160x120 பிக்ஷில் போட்டோக்களை எடுக்கின்றது.

இக் கமராப் பேனையானது பி.சி.மார்க்க தொடர் கேபிளுடன் இணைக்கப் பட்டிருக்கின்றது.

# கொக்கட்டிச்சோலை சந்தித்த இரு பெரும் இனப்படுகொலைகள்

படுகொலைகளைச் செய்வதிலும் அவற்றைப் பார்த்து ரசிப்பதிலும் கொலைகளைத் தந்திரமாக மூடிமறைப்பதிலும் புகழ் பெற்றவர்கள் வரிசையில் சிறிலங்காஆட்சியாளர்கள் முதன்மைபெறுகின்றன என்பதில் ஐயமில்லை. மாறிமாறி ஆட்சிக்கு வருமஆட்சியாளர்கள் தமதுவீரதீரச்செயற்பாடுகளை சிங்கள தேசத்திற்குக்காட்டி தமது ஆட்சியைத் தக்கவைப்பதற்குக் கிடைத்த ஒரேயொரு உத்திமுறைதான். தமிழினப் படுகொலைகள். சிங்களப் பேரினவாதிகளும் அரசின் இவ்வாறான திறமைக்கு முதலிடம் கொடுத்து வாக்களித்தும் வந்தனர் என்பதற்கு கடந்த கால தேர்தல்களும் அவற்றின் பேரினவாதிகளின் வாக்களிப்புக்களும் சான்றாக அமைகின்றன.



அந்த வகையில் 1991 ஆம் ஆண்டு பிறேமதாசாகாலத்தில் கொக்கட்டிச்சோலையில் நடந்த கொடூரப்படுகொலைச் சம்பவமானது ஒரு இன அழிப்பு நடவடிக்கைகளாகும்.

1991 ஆம் ஆண்டு கொக்கட்டிச்சோலை மகிழடித்தீவில் 132 இற்கு மேற்பட்ட மக்களைத் தமது வெறியாட்டத்திற்குப் பலியாக்கிக்கொண்டது சிங்கள இராணுவம். 1991 ஆனித்திங்கள் 12 ஆம் நாள் மகிழடித்தீவுக் கிராமம் நினைவழியாத இரண்டாவது துயரத்தைச் சந்தித்த நாளது. 1987 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நடாத்திய அதே செயற்பாட்டை அவரது வழி வந்த சகாநடாத்திய படுகொலையாக அமைந்தது. இந்த 1991 ஆம் ஆண்டு மகிழடிப் படுகொலை 132 பேரைக் கொன்றொழித்தது. 400 இற்கு மேற்பட்ட வீடுகளை எரித்து நாசமாக்கிச் சொத்துக்களைச் சூறையாடி சென்ற இராணுவத்தினரை யாரும் தட்டிக்கேட்கவில்லை. இராணுவம் விரும்பிய நேரம் வரலாம். விரும்பியோரை விருப்பமான தொகையில் சுடலாம். விரும்பிய பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தலாம். விரும்பிய வீடுகளை எரித்து நாசப்படுத்தலாம். என்ற உரிமையை அரசு வழங்கியிருந்தது. மான் சுட்டால் அன்றி மரை சுட்டால் ஏன் என்று கேட்க இந்நாட்டில் சட்டம் உண்டு. ஆனால் எண்ணிலடங்காத வகையில் மனிதர்களை சுட்டுத்தள்ளிப் பாரிய இனஅழிப் புக்களை மேற்கொள்ளும் சிங் களப்பேரினவாதிகளை தட்டிக் கேட்க யாரும் இல்லை.

1991 ஆம் ஆண்டு மகிழடித் தீவுப் படுகொலையில் தப்பிப் பிழைத்த ஒருவர் இவ்வாறு கூறுகின்றார். "எல்லா இடமும் வெடிச்சத்தம் கேட்குது வாங்கோ சனங்கள் போற பக்கம் நாங்களும் போவோம் என வீட்டுக்காரரை அழைத்துக் கொண்டு புறப்பட்டோம் அப்போது. குளக்கட்டுப்பகுதியால் வெடிகளைத் தீர்த்தவாறே நிறையப்பேரை ஆமிபிடித்துக்கொண்டு வருகிறான். எல்லோருக்கும் நினைத்துப்பார்க்க முடியாத அடி அடித்தவாறே வீடுகளையும் கொழுத்திக் கொண்டே வந்தான். எரியும் வீடுகளுக்குள்ளே பிடிச்ச ஆக்களை எல்லாம் தள்ளிவிட்டு உயிரோடு எரித்து விட்டதை நான் பார்த்தேன். அப்படியே வந்தவன் என்னையும் எனது தம்பியையும் பிடித்து இழுத்திட்டுப்போய் எரிந்துகொண்டிருந்த வீடொன்றுக்குள்தள்ளிவிட்டான். கையெடுத்துக்கும்பிட்டும் அவனுக்கு இரக்கமே வரவில்லை. வீட்டுக்குள் தள்ளப்பட்டதும் அங்கு கிடந்த நெல்லுமூடைக்குமேலே ஏறி அடுத்தபக்கம் குதித்தோம் 'பின் இருவரும் அடுத்த வீட்டுப்பக்கம் போய் அங்கு கிடந்த தகரத்தால் மூடிக்கொண்டு கிடந்தோம்" இவ்வாறு அவரது அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார்.

மற்றொருவர் கூறும் போது நாங்கள் எங்கள் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு ஒரு மில் இருந்த இடத்திற்கு ஓடினோம். அங்கு நிறையப் பேர் இருந்தார்கள். அவர்களுடன் நாங்களும் சேர நினைத்த போது வெடிச்சத்தம் கேட்டது அப்போது உள்ளே வந்தவன் எல்லோரையும் படபடவென சுடத்தொடங்கினான்.வயிறு தலை கழுத்து எல்லாப்பகுதிகளிலும் வெடி துளைத்துக்கொண்டு போனது, நானும் இரத்தத்தை அள்ளிப் பூசிக்கொண்டு கிடந்தன். மில்லில் இருந்த எல்லோரையும் சுட்டுட்டான். சத்தம் முடிந்த பிறகு என்ர பிள்ள என அம்மா கூப்பிடும் சத்தம் கேட்டது. எழும்பிப்பார்த்திட்டு அக்காவின் குழந்தையையும் தூக்கிக் கொண்டு பக்கத்து வீட்டுப்பக்கம் போனேன் அங்கு கையில்லாமலும் காலில்லாமலும் தலையில்லாமலும் நிறையப்பேர் செத்துக் கிடந்தார்கள். ஒரு குழந்தை சிதறிப்போய் சுவற்றோடு ஒட்டுப்பட்டுக்கிடந்தது. என கொலையின் கொடூரத்தை விளக்கினார்.

மற்றொருவர் இவ்வாறு கூறுகிறார். ஒவ்வொரு கும்பலாக வந்து எல்லோரையும் சுட்டுக்கொண்டு போனார்கள். கடைசியாக வந்தவர்கள் மில்லுக்குள் கிடந்தவர்களையெல்லாம் ஓலைகளைப் போட்டுக் கொழுத்தினார்கள். பிடித்து வந்த ஆண்களை குழி ஒன்றைச் சுற்றிவரச்சொல்லி ஒவ்வொருவராகச் சுட்டுச்சுட்டு குழிக்குள் விழுத்தினார்கள் என்றார்.

தமிழீழ விடுதலைப் போரில் காலத்துக்குக்காலம் தமிழின அழிப்பில் சிங்கள இனவாத அரசுகளும் அரசஇராணுவமும் ஈடுபட்டன. ஈடுபட்டு வருகின்றன. தமிழீழ தேசமெங்கும் தமிழினப் படுகொலைகளை இராணுவத்தினர் அரங்கேற்றிய போதும் கிராமம் கிராமமாக வகைதொகையின்றிக் கொல்லப்பட்டது.தென் தமிழீழத்திலேதான். தென்தமிழீழம் சிங்களக் குடியேற்றத்தாலும் இராணுவக் கொலைப் பசியாலும் இராணுவத்துடன் கூடி நின்ற ஆயுதம் தாங்கிய காடையர்களாலும் பிய்த்துக் குதறப்பட்டது.

1987ஆம் ஆண்டு நடைபெற்ற படுகொலையின் போது, குறிப்பாக ஆண்களே தெரிவு செய்து கொல்லப்பட்டனர். இது



ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின்காலத்தில் நடந்தேறிய சம்பவம். இதன் மூலம் அன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. சிங்களப்பேரினவாதிகளின் மத்தியில் கதாநாயகனாகத் திகழ்ந்தார். பின்னர் அவர்ஆட்சியில் இருந்து வெளியேற சனாதிபதிபிறேமதாசா ஆட்சிக்கு வந்தார். அவருக்கும் கதாநாயகராகத் திகழ வேண்டும் என்ற எண்ணம் உருப்பெற 1991 ஆம் ஆண்டு மீண்டும் அதே கொக்கட்டிச்சோலை மகிழடித்தீவிலும் மேலும் பல இடங்களிலும் பாரிய இன அழிப்புப் படுகொலையை நடாத்தி கதாநாயகரா னார்.

இவ்வாறு தமது ஆட்சிகளைத் தக்கவைக்க படுகொலைகளையே கேடயமாகப் பயன்படுத்தினர்.

ஆக மகிழடித்தீவுப் படுகொலையானது அப்பகுதி மக்களுக்கு மட்டுமன்றி ஒட்டு மொத்தத் தமிழினத்துக்கே துன்பத்தை ஏற்படுத்தியது மட்டுமன்றி தமிழ்த் தேசியவிடுதலையை உத்வேகப்படுத்துவதற்கான உணர்வினையே தோற்றுவித்தது. சிங்கள பேரினவாதிகளுக்கு எதிராகப் போரிடும் உறுதியை உருவாக்கிய பெருமை இந்த வகையில் மாறிமாறி வந்த அரசுகளையே சாரும். ஆனால் இவ்வாறு இன அழிப்பையும் படுகொலைகளையும் அரசு செய்து வந்த போதும் சர்வதேசம் ஏனோ மௌனமாகவே இருந்தது.

**சசிக்குமார்**

இதன் தொடர்சியைத்தான் பின்னர் வந்த அரசும் மேற்கொண்டு வந்தது. என்பது குறிப்பிடத்தக்கதாகும் 1987,1991 காலப்பகுதியை மட்டுமன்றி சிங்கள அரசுகள் தொடர்ந்து மேற்கொண்ட ஒவ்வொரு படுகொலையும் இதன் மூலம் தமிழர்தாயகத்திலிருந்து சிங்களப் பேரினவாதம் முற்றாக அப்புறப்படுத்தப்பட்டால் மட்டுமே தமிழினம் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ முடியும் என்ற நிலை மக்களிடையே தோற்றுவித்தது.

கடந்த இரண்டாண்டுகள் சமாதான முயற்சிகள் இடம் பெற்றாலும் படுகொலைகள் முற்றுப்பெற்றுவிடவில்லை. குறிப்பாக கிழக்கில் அரசு ஆதரவுப் படுகொலைகள் குறித்து இன்னும் மக்கள் விசனமடைய வேண்டிய நிலை காணப்படுகிறது. இவை மக்களை மேலும் சிங்கள அரசுகள் குறித்த கருத்தை உறுதிப்படுத்தவே உதவுகின்றன.

---

## ஜப்பானியக் குழு மட்டக்களப்பிற்கு விஜயம் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஜப்பானியத் தூதுக் குழு ஒன்று விஜயம் செய்துள்ளது.

இந்த ஜப்பானியத்தூதுக் குழுவினருக்கும், மட்டக்களப்பு, பதில் அரசாங்க அதிபர் புண்ணியமூர்த்திக்குமிடையிலான சந்திப்பொன்றும்நேற்றுமுன்தினம்மட்டக்க ளப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இப்பேச்சுவார்த்தையின்போது மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஜப்பானிய தூதுக் குழுவினருக்கு பதில் அரச அதிபர் புண்ணியமூர்த்தி விளக்கமளித்துள்ளார். இதன்போது மட்டக்களப்பு முதல் திருகோணமலை வரையிலான போக்குவரத்தை சீர்செய்ய ஜப்பான் அரசு உதவி வழங்கவேண்டுமெனவும் அரச அதிபர் கேட்டுக் கொண்டார்.

பின்னர் மட்டக்களப்பு கமநல சேவைத் திணைக்களத்திற் குச் சென்ற ஜப்பானியத் தூதுக் குழு அங்கு விவசாயிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து, அவர்களது பிரச்சினைகள் குறித்தும் ஆராய்ந்துள்ளது..

மட்டக்களப்பின் பல பகுதிகளுக்கும் விஜயத்தினை மேற்கொண்ட இவர்கள் தமது செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்ந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல் செயலகத்திற்கு விஜயத்தினை மேற்கொண்ட ஜப்பானியத் தூதுக் குழு புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து மாவட்டத்தின் அபிவிருத்தி குறித்தும் விளக்கமளித்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்கான பல செயற்திட்டங்களுக்கும் ஏழு மில்லியன் தொட[illegible]ட்டு மில்லியன் [illegible]ரையிலா[illegible] நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவித்த அக்குழு முதல் கட்டமாக செயற்திட்டங்களை அமுல் செய்யும் சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயவுள்ளதாகவும் அவற்றுடன் விவசாயத்துறை, மீன்பிடிதுறை ஆகியவற்றை அபிவிருத்தி செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## பத்தர முல்லையில் இருவர் பொலிசாரால் சுட்டுக்கொலை

பத்தரமுல்லை சந்தியில் நேற்று முன்தினம் இரவு 12-30 இற்கு காவற்துறை மேற்கொண்ட துப்பாககிச் சூட்டில் 2 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டு 2 பேர்காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீதியில் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டியை வளிமறித்த வேளை அவ்வண்டி நிறுத்தப்படாமல் சென்ற அதேவேளை கைக்குண்டுத் தாக்குதல் நடத்தமுற்பட்டதாகவும் காவற்துறை தெரிவித்துள்ளது. இதனை அடுத்தே தாம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எல்பிட்டிய மற்றும் பெலவத்தவைச் சேர்ந்த இவர்களால் செலுத்திவரப்பட்ட முச்சக்கர வண்டி கொள்ளையிடப்பட்ட வண்டி என காவற்துறை தெரிவித்துள்ளது.

---

## இத்தாலிக்குச் சென்ற 400 இலங்கையர் சோமாலியாவில் நிர்க்கதியான நிலையில்

சோமாலியாவில் இலங்கையர்கள் சுமார் 400 பேர் வரை நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் இத்தாலி செல்லும் வழியிலேயே சோமாலியாவில் நிர்க்கதியாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அங்கிருந்து தப்பி வந்ததாக கூறப்படும் நீர்கொழும்பைச் சேர்ந்த சிலரே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

நிர்க்கதியாகியுள்ளதாக இலங்கையர்கள் பொஸோபா என்ற விருந்தகத்தில் உரிய வசதிகளின்றி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.அவர்களில்கிரிபத் கொடையை சேர்ந்த ஒருவர் நோயினால் பாதிககப்பட்டு, மரணமானதாகவும் தப்பி வந்தோர் கூறியுள்ளனர், 5 வர்த்தகர்களே அவர்களை இத்தாலிக்கு அனுப்பி வைத்ததாகவும், ஒவ்வொருவரும் தலா 4இலட்சம்முதல் 8 இலட்சம்வரைஅவர்களுக்கு பணமாக வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழீழப் போக்குவரவுக்கழகம்

## சிறப்புப் பேருந்துப்பணி

14–06–2004ஆம் நாள் நடைபெறும் புதூர் நாகதம்பிரான் கோவில் பொங்கல் நாளினை முன்னிட்டு தமிழீழப் போக்குவரவுக் கழகத்தினால் முல்லைத்தீவு, செம்மலை, நாயாறு, முள்ளியவளை, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, கந்தபுரம், முகமாலை, பூநகரி, முழங்காவில், வெள்ளாங்குளம், மடு, மல்லாவி, புளியங்குளம், இளமருதங்குளம் ஆகிய இடங்களிலிருந்து பேருந்துப் பணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

**தமிழீழப் போக்குவரவுக் கழகம்,**
**நடுவப் பணிமனை,**
**விசுவமடு.**

(4587)

## இறக்குமதியாளர் கவனத்திற்கு

வருவாய்ப்பகுதியில் இறக்குமதிக்கான உரிமத்தைப் பெற்று, இறக்குமதியிலீடுபடாத இறக்குமதியாளர் அனைவரையும் 2004.06.30 ஆம் நாளிற்கு முன் கிளிநொச்சியிலமைந்துள்ள வருவாய்ப்பகுதிச் செயலகத்துக்கு நேரில் வருமாறு வேண்டுகிறோம். தவறுவோரின் உரிமம் நீக்கப்படுமென்பதை அறியத்தருகிறோம்.

பொறுப்பாளர்,
நடுவப்பணியகம்,
வருவாய்ப் பகுதி,
நிதித்துறை.

(சி-9714)

### மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

### வடக்கு-கிழக்கு மாகாண சபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

# கேள்வி கோரல் – இல 03

# பாடசாலை மரத்தளபாடங்கள் கொள்வனவு

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்) ஆகு செலவு சார்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து நன்கொடை ஒன்றிற்கு இலங்கை அரசாங்கம் விண்ணப்பித்துள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பாடசாலை மரத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்நன்கொடையின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருனராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்ட கேள்விச் சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இல. | கேள்வியின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் | கூறுவிலை பிணைப்பணம் |
|---|---|---|---|
| 01. | கிளி/கார்ப்/ஈடி/01/01 | 2000/- | 30, 000/- |
| 02. | திரு/கார்ப்/ஈடி/13 | 2000/- | 23, 000/- |
| 03. | மட்/கார்ப்/ஈடி/03/01 | 2000/- | 20, 000/- |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்விகள் கோருவதற்குத்தகுதி வாய்ந்தவர்களாவார்கள்.

I. ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குமான கேள்விகோருபவர், கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தத்தை திருப்திகரமாக முடித்திருக்க வேண்டும். போதியளவு தொகையிலான பாடசாலை மரத்தளபாடங்களை உற்பத்தி செய்யும் ஒரு தச்சுவேலை அல்லது வில் ,காய்ச்சியொட்டுதல் வேலைத்தளத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளராக இருக்க வேண்டும் என்பதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பதை நிரூபதற்கான சான்றிதழைக்கொண்டிருத்தல் வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றார்.

II: ஒப்பந்தம் ஒன்றைக் கையாள்வதற்கு கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன் தொழிற்படுத்தல் மூலதனம் உள்ளதென நிரூபிக்க வேண்டும். இதற்கு மாற்றீடாக, கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன் கொண்ட தொகையொன்றுக்கு இலங்கையில் உள்ள மதிப்பு வாய்ந்த வங்கியொன்றிலிருந்து நிபந்தனையற்ற கடன் வழங்கப்படும் என உத்தரவாதம் பெற்ற கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். இத்தகைய கடன் சான்றானது. திட்டப் பணிப்பாளருக்கு விலாசமிடப்பட்ட கடிதம் என்ற அமைப்பில் இருக்க வேண்டும் என்பதுடன், கேள்வி கோருபவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டால், மேற்கொள்ளப்பட்ட வேலைக்கு பிரத்தியோகமாக இக்கடனை வழங்கும் என அக்கடிதத்தில் தெளிவாகக் காட்டப்படவேண்டும்.

III:மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

04. ஒப்பந்தகாரர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்கு கேள்வி கோரலாம். ஆனால், இத்திட்டத்தின் கீழ் ஒரு கேள்விதாரருக்கு ஒரு ஒப்பந்த வேலை மட்டுமே வழங்கப்படும்.

05. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப் படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு,கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD) 140 மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்ற விலாசத்திலுள்ள திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல: 026-2227434, தொலை நகரி : 026-2227401, மின்னஞ்சல் necord@ sltnet lk.

06. கேள்வி ஆவணங்களை 2004 ஜூன் 14ஆம் திகதியிலிருந்து 2004 ஜூன் 24ஆம் திகதி வரை காலை 9.30இலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, இது தொடர்பாக பந்தி 2இல் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திக்கொள்வனவு செய்துகொள்ளலாம்.

07. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் தலைவர், கருத்திட்ட கேள்விச் சபை NECORD, 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்று விலாசமிடப்பட்டு, பதிவுத் தபால் மூலம் குறிப்பிட்ட பிணைப்பணம் அடங்கலாக 2004 ஜூலை 01ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கும்படி அனுப்பப்படவேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அந்நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

08. கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு 1 வாசகம் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணத்தில், இது தொடர்பாக பந்தி 07இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

09. சகல கேள்வி ஆவணங்களுடன் மேலே பந்தி 02இல் உள்ள அட்டவணையில் காட்டப்பட்ட கூறு விலைப் பிணைப்பணமும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

11. உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன் ஒவ்வொரு வகையான மரத்தளபாடங்களின் மாதிரிகளைத் தகுதி வாய்ந்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் செவ்வை பார்ப்பதன் பொருட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

**த. லங்காநேசன்,**
திட்டப் பணிப்பாளர்,
வடக்கு,கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)
140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை.

(சி-9828)

## படகு கட்டும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

ஐக்கியராச்சியத்தின் நிதியுதவியுடன் புனர்வாழ்வு அமைச்சினால் நடைமுறைப்படுத் தப்படும் திட்டம் ஒன்றின் கீழ் கிண்ணியா, திருகோணமலை, தலைமன்னார் மற்றும் காரை நகர் ஆகியவற்றின் போக்கு வரத்திற்கென உருக்கில் செய்யப்பட்ட படகுகள் வழங்கப்படவுள்ளன.

இப்படகுகள் வழங்கலுக் கான ஒப்பந்தத்தை பிரிட்டிஷ் பொறியியல் ஸ்தாபனம் ஒன்று எடுத்துள்ளது.

கிண்ணியாவிற்காக அறுபது மீற்றர் நீளமும் பத்து மீற்றர் அகலமும் கொண்டதாக படகொன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இப்படகைச் செலுத்துவதற் காக வீதி அபிவிருத்தி அதி காரசபை ஊழியர்களுக்கு பிரிட்டிஷ் பொறியியலாளர்கள் பயிற்சியளித்து வருகின்றனர்.

## மினி சூறாவளி

(கொழும்பு)

மினிசூறாவளி தாக்கியதால் நாற்பதிற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்த சம்பவம் சிறி லங்காவின் மாத்தறை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இம்மாவட்டத்தில் மாத்தறை, தங்கால, எம்பிலிப்பிட்டிய பகுதிகளில் சென்ற புதன் இரவு மினி சூறாவளி வீசியதில் மாத் தறையில் 14 வீடுகளும், தங் கால 18 வீடுகளும், எம்பிலிப் பிட்டியவில் பத்து வீடுகளும் சேதமடைந்துள்ளதாகவும்.இவற்றின் பெறுமதி சுமார் 6.5 மில்லியன் ரூபாய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவ்வப் பிரதேசச் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இப்பிரதேசங்களில் மின்சார விநியோகம், போக்குவரத்து என்பனவும் சூறாவளி யால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பிரதேசச் செயலர்கள் தெரிவித்துள்ளனர்.

## 3 இராணுவத்தினர் காயம்

(கொழும்பு)

அநுராதபுரம் பிள்ளையார் சந்திக்கு அருகில் கடந்த திங்கட்கிழமை 4.30 மணியளவில் நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டு விபத்துக்குள்ளாகியதில் நால்வர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் மூவர் இராணுவத்தினர், மற்றவர் சிவிலியன். அநுராதபுரத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு விட்டுப் பின்னர் சாலியபுர முகாமை நோக்கி சென்று கொண்டிருந்த வேளையிலேயே இராணுவத்தினர் இந்த விபத்தில் சிக்கியுள்ளனர்.

அதிக வேகத்துடன் வாகனங்களைச் செலுத்தி வந்ததாலேயே இவ்வாகன விபத்து ஏற்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக வான் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், வாகனங்கள் நான்கும் பொலிஸ் நிலையம் எடுத்துவரப பட்டுள்ளது என்றும் போக்குவரத்துப் பிரிவுப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# ஈராக்கிற்கு இந்தியப்படைகளை அனுப்புவதுபற்றி உரியதருணம் வரும்போது முடிவு செய்யப்படும்

## - இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

**ஈராக்கிற்கு இந்தியப் படைகளை அனுப்புவது குறித்து உரிய தருணம் வரும் போது இந்தியா முடிவு செய்யும். இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.**

அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதி றொனால்ட் றீகனின் இறுதிச் சடங்குகளில் இந்தியா சார்பில் கலந்துகொள்வதற்கு அமெரிக்காவுக்கு நட்வர்சிங் சென்றுள்ளார். நேற்றுமுன்தினம் வோஷிங்டனில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவலுடன் சேர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சர், ஈராக்கிற்கு இந்தியப் படைகளை அனுப்புவது குறித்து உரிய தருணம் வரும் வேளை இந்தியா அதுபற்றி முடிவுசெய்யும் என்று கூறியுள்ளார்.

அத்துடன், ஈராக் நாட்டில் சுயாதிபத்தியத்தை ஏற்படுத்துவது பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை மிகவும் நுட்பமாக இந்தியா கவனித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவில் தற்போது புதிய கூட்டணி ஆட்சியமைத்துள்ளதால் ஈராக் விடயம் பற்றி பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுவிலும், அரசின் உயர்நிலை அதிகாரிகள் மட்டத்திலும் விவாதித்த பின்னரே முடிவு செய்யமுடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியப் படையினரை ஈராக்கிற்கு அனுப்புவது இல்லை என்று கடந்த பாராளுமன்றம் தீர்மானம் எடுத்திருந்தது.

தற்போது ஆட்சி மாறியுள்ளது. அதேபோல் ஈராக் விடயத்திலும் நிலைமை மாறியுள்ளது. ஐ.நா.சபையில் ஈராக் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன் அரபு நாடுகளும் இதில் பங்கேற்றுள்ளன. எனவே ஈராக்கிற்கு படையினரை இந்தியா அனுப்புவது குறித்து கவனமாகப் பரிசீலிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## உலக வங்கி பாராட்டு

(புதுடில்லி)

இந்த அரசின் குறைந்த பட்ச செயற்திட்டத்தில் விவேகமான அம்சங்கள் இருப்பதாக உலகவங்கியின இந்தியப்பிரிவு இயக்குனர் மைக்கில் டார்வுன் நேற்றுக் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் இந்தியா ஆறு சத வீத வளர்ச்சியை எட்டமுடியும் என்று கூறியஅவர் வரி வருமானப் பற்றாக் குறையை கட்டுப்படுத்துவது மிக அவசியம் என்று கூறியுள்ளார்.

## ஜெயலலிதா மீதான குற்றச்சாட்டை பதிவுசெய்யக் கோரிக்கை

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீது சட்டப்படி குற்றச்சாட்டுக்களைப் பதிவு செய்யும் படி வருமான வரித்துறையினர் சென்னை நீதிமன்றத்திடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தமிழக முதலமைச்சர் வருமானவரிக் கணக்குகளை சட்டப்படி இதுவரை வெளிப்படுத்த வில்லை எனும் வழக்குள்ளது. இந்த வழக்கு விசாரணைகளில் இதுவரை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேரில் ஆஜராகாமல் அவகாசம் கேட்டுக் காலம் தாழ்த்தி வந்தார். தற்போது இந்த வழக்கில் இருந்து தம்மை விடுவிக்கும்படி மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். ஆனால் வழக்கில் ஆஜராகாமல், விடுவிக்கக்கோரும் மனுவை தாக்கல் செய்யத் தமிழக முதலமைச்சருக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று வருமான வரித்துறை கூறியுள்ளது.

அத்துடன் இது தொடர்பான பதில் மனுவில் தமிழக முதலமைச்சர் மீதான குற்றச்சாட்டுக்களை நீதிமன்றம் பதிவு செய்யவேண்டும் என்றும் வருமானவரித்துறை கோரியுள்ளது.

## கர்நாடக முதலமைச்சருடன் ச.மு.கூ. கட்சியினர் பேச்சு

(புதுடில்லி)

கர்நாடகம் சென்றுள்ள சனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் தலைவர்கள் நேற்று முன்தினம் கர்நாடக முதலமைச்சர் தரங்சிங் துணைமுதலமைச்சர் சித்தராமையா மற்றும் அமைச்சர்களைச் சந்தித்து தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்துவிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். தமிழகக்குழுவின் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலனை செய்வதாக தரங்சிங் கூறியுள்ளார் என்று செய்தியாளர்களிடம் பேசிய சனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள் கூறியுள்ளனர். இந்தக்குழு நேற்று முன்தினம் தமிழகம் திரும்பியுள்ளனர்.

## இந்–பாக். இருதரப்பு உறவில் புதிய தொடக்கம் வேண்டும்

### இந்திய அமைச்சர் நட்வர்சிங்

(புதுடில்லி)

இந்தியா பாகிஸ்தானிற்கிடையேயான இருதரப்பு உறவுகளில் புதியதோர் தொடக்கம் வேண்டுமென வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காஷ்மீர் பிரச்சினை தான் முக்கியமானதென பாகிஸ்தான் வலியுறுத்தி வந்தமையால் தான் கடந்த 57ஆண்டுகளில் எந்தவோர் தீர்வும் ஏற்படவில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் பிரச்சினை முதலில் விவாதிக்கப்படவேண்டும் பின்னர் இதற்கமைய தான் இரு தரப்பு உறவுகளில் முன்னேற்றம் ஏற்படுமென பாகிஸ்தான் எடுத்துள்ள நிலை குறித்து பா.ஜ.கட்சியினர் கேள்வி கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள பல்வேறு பிரச்சினைகளில் காஷ்மீர் ஒரு பிரச்சினையெனவும் ஆனால் இருதரப்பு உறவுகளுக்கான அலுவல் பட்டியலில் அணுவாயுத பரம்பல் தடுப்பு விடயம் முக்கியமாக இடம் பெறவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தொண்டமானின் கோரிக்கை அமைச்சரவையால் நிராகரிப்பு

மலையகத்தில் பெரும் அரசியல் சர்ச்சைகளை ஏற்படுத்திய மேல் கொத்மலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதென அமைச்சரவை தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசிடம் முன்வைத்த கோரிக்கைகளில் பிரதானமான மேல் கொத்மலைத்திட்டத்தை நடைமுறைபடுத்தக் கூடாது என்ற இந்தக் கோரிக்கையை அமைச்சரவை நிராகரித்துள்ளது. இதேவேளை கத்தோலிக்கர்கள் மத்தியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நுரைச்சோலை அனல் மின் நிலையத் திட்டம் தொடர்பாகவும் கத்தோலிக்க ஆயர்கள் சபையுடன் பேச்சுவார்த்தை நடத்துவதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.


31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
20 . 08 . 1943



ஆண்டவன் அணைப்பில்
14 . 05 . 2004

அமரர் தருமலிங்கம். சந்திரகுமாரலிங்கம்
(கனகபுரம்,கிளிநொச்சி)

கண்நிறைந்த கணவராய் வாழ்வுதந்து
பாசமிகு தந்தையாய் உயர்வு தந்து
அன்பாக எமைக்காத்து வந்த
அன்புத் தெய்வமே அப்பா.

துயரத்தில் வாடுகின்றோம்
துயர் துடைக்க வாறீரோ
உங்கள் ஆத்மா சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

அந்தியேட்டிக் கிரியை 11.06.2004
அன்று நடைபெற்று, 13.06.2004
ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னாரின்
கனகபுரம் இல்லத்தில் நடைபெறும்
மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு
வேண்டுகின்றோம்.

கனகபுரம் ம.வி.வீடுதி,
கனகபுரம், கிளிநொச்சி.

தகவல்
குடும்பத்தினர்.

(4606)



கண்ணீர் அஞ்சலி



சுரேஸ் (நளின்)
(சிவநகர் உருத்திரபுரம்
கிளிநொச்சி)

அம்புரோஸ்
அலெக்ஸ்புருஸ்டன்
(ஜேனி)
(வெற்றிலைக் கேணி.முள்ளியான்)
தமிழீழ நிர்வாகசேவைப் பணியாளர்

A.P. தயாரத்தன
(குருநாகல்)
கனரக இயந்திர உரிமையாளர்

11.06.2004 அன்று கிளிநொச்சி பரந்தன்
1ஆம் கட்டைப் பகுதியில் எதிர்பாராத விதமாக
இடம்பெற்ற வாகனக்கண்ணிவெடி வெடித்ததில்
சாவடைந்த இம் மூவருக்கும் எமது கண்ணீர்
அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர்,
பணியாளர்கள்,
திமிழீழ நிர்வாகசேவை.

(சி.9830)

### இங்கிலாந்து-நியூசிலாந்து மூன்றாவது டெஸ்ட் போட்டி

# பிளெமிங்,ஸ்கொட்ஹரிசின் சதத்தின் உதவியுடன் நியூசிலாந்து இரண்டாம்நாளில் 374 ஓட்டங்கள்

இங்கிலாந்துக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி நியூசிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் சிறப்பான ஆட்டத்துணையுடன் இரண்டாம் நாள் மதியபோசன ஆட்ட நேர முடிவின் போது நியூசிலாந்து 7 விக்கெட்டுக்களை இழந்து 374 ஓட்டங்களை பெற்றிருந்தது.

அணித்தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் ரிச்சட்சன் ஆகியோர் இணைந்து ஆரம்ப விக்கெட்டுக்காக 163 ஓட்டங்களை பகிர்ந்தனர். ரிச்சட்சன் 73 ஓட்டங்களையும், பிளெமிங் 113 ஓட்டங்களையும் பெற்றார். இதனைத்தவிர ஸ்கொட்ஹரிஸ் 105 ஓட்டங்களையும் பெற்றார்.

பந்து வீச்சில் ஹார்மிசன் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். நியூசிலாந்து அணியைப் பொறுத்து ஸ்ரீபன் பிளெமிங்,ஸ்கொட்ஹரிஸ் ஆகியோரின் சதத்தின் உதவியுடன் 374 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டாலும் கடநிலை வீரர்கள் மற்றும் மத்திய வீரர்கள் சரியான முறையில் பிரகாசிக்காத காரணமாக 374 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை நியூசிலாந்து இழந்தமை குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் ஏற்கனவே கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.




## இந்திய அணிக்கு பாலாஜி, பதானின் வரவு தமது பலத்தை எந்தவகையிலும் பாதிக்காது

**-ஆசிஸ் நெய்ரா**



இந்திய கிரிக்கெட் அணிக்கு பாலாஜி, இர் பான் பதான் போன்ற சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள் கிடைத்திருப்பது தமது பலத்தை எந்த வகையில் பாதிக்காது என்று ஆசிஸ் நெய்ரா கூறியுள்ளார்.

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு இந்திய வீரர்கள் பெங்களூரிலும் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பயிற்சியின் போது செய்தியாளர்களிடம் பேசிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களின் ஒருவரான நெய்ரா பாலாஜி இர்பான், பதான் ஆகியோரின் வரவு இந்திய அணிக்கு வலுச்சேர்ப்பதாகவுள்ளது என்றார். இதனால் தான் கவலைப் படவில்லை என்று கூறிய அவர் அடிக்கடி தனக்கு ஏற்படும் காயமே கவலையளிப்பதாகவுள்ளது என்றார்.

இந்தப்பயிற்சி முகாமில் சாஹிர் கான், அகக்கர் பதான், பாலாஜி ஆகிய வேகப்பந்து வீச்சாளர்களும் பங்கேற்றனர்.

## கிளிநொச்சி மாவட்ட கனிஷ்ட பிரிவு கிரிக்கெட் அணி தம்புள்ளையில் இருநாள் பயிற்சி முகாமில் பங்கேற்கும்

### நேற்று கிளியில் இருந்து பயணமானது

கிளி.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் கனிஸ்ர பிரிவுக்குரிய அணியான கிளிநொச்சி மகாவித்தியாலய அணி தம்புள்ள ரண்கிரிய சர்வதேச விளையாட்டு மைதானத்துக்கு இருநாள் பயிற்சிக்காக கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிலையத்தில் இருந்து நேற்றுப் பிற்பகல் புறப்பட்டுச் சென்றுள்ளது.

14 வயதுக்குட்பட்ட இவ்வணியின் 18 பயிற்சியாளர்களும் அவர்களுக்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

மேற்படி கிரிக்கெட் அணி கடந்தமாதம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி, சுழிபுரம் விக் டோரியா கல்லூரி ஆகிய பாட சாலைகளுக்குச் சென்று தமது முதலாவது சினேகபூர்வ ஆட்டங்களைத் தொடங்கி பாடசாலை மட்டத்திலான கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொண்ட முதலாவது கடினப்பந்து கிரிக்கெட் அணியாகும். இந்த அணி இவ்வருடம் கொழும்பில் நடைபெறும் 'அஸ்ரா கிண்ண' போட்டியில் கலந்துகொள் ளவுள் ளது.

நேற்று தம்புள்ள ரண்கிரிய விளையாட்டு மைதானத்தில் இருநாள் கிரிக்கெட் பயிற்சிக்காக புறப்பட்டுச் சென்ற அணியில் அணித்தலைவர் க.அனுசன், உபதலைவர் வ.இமுதகுமார், ம.அனற்டிலக்சன், ப.துஸ்யந்தன், ஜே.தியோனி, ந.சோகுலன், த.யதுர்சன்,க.சஞ்சீவன், வா.சஞ்சீவன், லோ.பிரசாத் கி.சிவகுமார், கி.ரவிக்குமார், ஆ.அனுசாந், கி.சுகீதன், யோ.கௌதமன், ம.ஜனகன், இ.கிருசாந், கி.ரஞ்ஜீவ் ஆகியோர் அடங்கிய அணியினரும் இவர்களுக்கான பயிற்சி ஆசிரியர் திரு.ச.அலன்டீலன், கிளி மகாவித்தியாலய கிரிக்கெட் பொறுப்பாசிரியர் திரு.இ.சிவலிங் கம் ஆகியோரும் பயணமாகியுள் ளனர். இவர்களை கிளி மகாவித் தியாலய அதிபர் திரு.வ.யோக நாதன், உபஅதிபர் திரு.அ.பங் கையற்செல்வன் ஆகியோர் வழியனுப்பி வைத்தனர். (லோ,சோ,கு)

## இந்தியாவுக்கான தென்னாபிரிக்க சுற்றுலா உறுதி இரு நாட்டு கிரிக்கெட் தலைவர்களும் பேசிமுடிவு

தென்னாபிரிக்க அணி இந்த வருடம் இந்தியாவுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்க அணியின் இந்திய சுற்றுப்பயணவிபரம் முழுவடிவம் கொடுக்கப்படாமல் இருந்து வந்தது. இந்நிலையில் டுபாயில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் சபையின் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற இந்திய கிரிக்கெட் சபை தலைவர் ஜக்மோகன் டால்மியா மற்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட் சங்கத்தலைவர் றேமானி ஆகியோர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசி மேற்படி முடிவுக்கு வந்துள்ளனர்.

அதன்படி வரும் நவம்பர் மாதம் தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் போட்டியிலும் ஒரு பயிற்சிப் போட்டியிலும் விளையாடவுள்ளது.இதனைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெறவிருக்கும் ஒரு நாள் போட்டித் தொடரில் இந்திய- தென்னாபிரிக்க அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

இதன்மூலம் இப்பிரச்சினைக்கு சுமுக தீர்வு காணப்பட்டுள்ளதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சங்கத்தலைவர் றேமானி தெரிவித்துள்ளார்.



தேசிய ஹொக்கிப் போட்டியில் கிண்ணத்தை வென்ற டொரன்டோ தம்பாபே அணியின் பிராட் றிச்சட்சன் (சிறந்த விளையாட்டு வீரர், தலைமைத்துவம் போன்றவற்றுக்கான விருதும் வழங்கப்பட்டது)

## ஐரோப்பிய நாடுகள் கலந்துகொள்ளும் "யூரோ 2004" கால்பந்து போட்டிஆரம்பம்

ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலரன "யூரோ2004" கால்பந்து சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது. போர்த்துக்கல்லில் நடைபெறும் இப்போட்டியில்16 நாடுகள் பங்கேற்கின்றன.

உலகக்கிண்ணக் கால்பந்து போட்டிக்கு அடுத்த நிலையில் வைத்து பார்க்கும், போட்டியாக யூரோ கிண்ண கால்பந்து போட்டி அமைகிறது.

யூரோ 2004 போட்டிகளை முன்னிட்டு போர்த்துக்கல் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இதில் நடப்பு சம்பியன் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் எதிரான போட்டி பலத்த எதிர்பார்ப்பைப் பெற்றுள்ளது.

நாளை நடைபெறவுள்ள இப்போட்டியைக் கண்டுகளிக்க 50,000 இங்கிலாந்து ரசிகர்கள் போர்த்துக்கல் சென்றுள்ளனர்.

இவர்களில் குழப்பத்தை ஏற்படுத்துவோரைக் கண்காணிக்க போர்த்துக்கல் பொலிசார் கடும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதன் எதிரொலியாக சிலர் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

போர்த்துக்கல் அணிஇம்முறைபலம்வாய்ந்த அணிகளில் ஒன்றாகக் கருதப்படுவதால் உள்நாட்டு ரசிகர்கள் மத்தியிலும் போட்டிகள் தொடர்பான ஆர்வம் அதிகரித்து காணப்படுகின்றது.

## கொரிய சமாதான விளையாட்டு விழாவில் மன்னார் புனித சவேரியார் கால்பந்து அணி

ஜூலை மாதம் 20ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை தென்கொரியாவில் நடைபெறவுள்ள சர்வதேச சமாதான விளையாட்டு விழாவில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை உதைப்பந்தாட்ட அணி கலந்து கொள்ளவுள்ளது.

சென்ற வருடம் அகில இலங்கை ரீதியில் சம்பியன் பட்டத்தை மேற்படி பாடசாலை அணி பெற்றுக் கொண்டது.

மன்னார் மாவட்டத்தில் இருந்து விளையாட்டு அணி ஒன்று வெளிநாட்டு போட்டி ஒன்றில் பங்குபற்ற செல்வது இதுவே முதல் தடவையாகும்.


மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ள 18 பேர் கொண்ட வீரர்களுடன் இரண்டு பயிற்சியாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோர் கொரியா பயணமாகவுள்ளனர்.

## பிரெஞ் டிடூர் துவிச்சக்கர வண்டிப்போட்டி; பங்குபற்றும் வாய்ப்பை பிச்சன் இழக்கிறார்

அடுத்த மாதம் பிரான்சில் நடைபெறவுள்ள "பிரெஞ்சு டிடூர்" துவிச்சக்கர வண்டி பந்தயத்தில் பங்குபற்றவிருந்த பிரான்சின் பிரபல வீரர் மிக்கேல் பிச்சன்தலையில் ஏற்பட்ட காயத்தால் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பை இழக்கிறார்.

இப்போட்டியில் பங்கேற்பதற்கான பயிற்சிப்போட்டியில் அவர் கலந்து கொண்டபோது கடந்த புதன் கிழமை தவறி விழுந்து தலையில் அடிபட்டு காயமடைந்தார். இதனால் மூளையில் பாதிப்படைந்திருக்கலாம் எனக் கூறும் வைத்தியர்கள் தோள் மூட்டு பிரச்சினையாக இருப்பதாகவும் வலது கால், தாடை என்பன காயப் பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். எனினும் அவர் விழுந்த முறையில் அவருக்கு பாரதூரமாக எதுவும் நடக்காதது குறிப்பிடத்தக்கது என்று தெரிவித்துள்ளார்.

இதுவரை சென்று பார்வை யிட்ட ஸ்கொட்லாந்து அணித்தலை வர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். விழுந்தவுடன் தன்னைக் கவனிக்க உடனடியாக மருத்துவ உதவியளிக்கப்படாதது பற்றி அதிருப்தி தெரிவித்துள்ள பிச்சன் தான் பின்னர் வானூர்தி மூலம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டதை நினைத்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.




ரெக்சாஸ் மாநிலத்தில் ஒஸ்டினில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் அரிசோனாவைச் சேர்ந்த கைல் கொக்லிசை கடந்து ஓடும் அலிஸரையர் கிரேக்.

## பந்து வீச்சு விதிமுறையில் மாற்றம் வேண்டும் ஐ.சி.சி.யிடம் சிறிலங்கா கிரிக்கெட் கோரிக்கை

சிறிலங்காவின் நட்சத்திர பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரனின் பந்து வீச்சு சர்ச்சையை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் சிறிலங்கா கிரிக்கெட்சபை சர்வதேச கிரிக்கெட்சபையிடம் (ஐ.சி.சி) பந்து வீச்சு விதிமுறைகளில் மாற்றத்தைக் கொண்டு வருமாறு கோரவிருக்கிறது.

இத்தகவலை கிரிக்கெட் சபையின் தலைவர் மோகன் டிசில்வா பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார். இதன்படி பந்து வீச்சு முறையில் சுழல்பந்து வீச்சுக்கு 15 பாகையாகவும் மிக வேகப்பந்து வீச்சுக்கு 7.5 பாகையாகவும் வேகப்பந்து வீச்சுக்குப் 10 பாகையாகவும் மணிக்கட்டை வளைத்து வீச அனுமதிக்கப்படவேண்டும் என கேட்கவிருப்பதாக சபைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

வேகப்பந்து வீசுபவருக்கு ஒருமுறையும் சுழற் பந்து வீச்சாளருக்கு வேறொரு முறையும் இருக்கவேண்டும் என்பது சரியாகக் கருதவில்லை என்றும் வேகப்பந்து வீசுபவர் சிலவேளை சுழற்பந்தை வீசுவார். சுழற்பந்து வீச்சாளர் வேகப்பந்தை வீசுவார் எனவும் தெரிவித்துள்ளார். இந்த விவகாரத்தில் சரியான முறை தெரியாவிட்டாலும் இதில் வரையறை ஒன்று இருக்கவேண்டும் என்பது தனது கருத்து எனவும் அவர் தெரிவித்துள்ளார்


## சிம்பாப்வே கிரிக்கெட் அணிக்கு டெஸ்ட் போட்டியில் கலந்து கொள்ளத் தடை

சிம்பாப்வே கிரிக்கெட் அணி டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடுவதிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்டுள்ளது.

இவ் ஆண்டின் டிசம்பர் மாதம் வரை எந்தவிதமான டெஸ்ட் போட்டிகளிலும் சிம்பாப்வே விளையாட முடியாது என்று (ஐ.சி.சி) சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது.

ஏற்கனவே சிம்பாப்வே அணிக்குள் எற்பட்ட முரண்பாடு காரணமாக முன்னணி வெள்ளையின வீரர்கள் அணியில் இருந்து நீக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. அந்தவகையில் சிம்பாப்வேக்கு மேற்படி தடை உத்தரவை துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்டுள்ளது.

## சிந்தனைக்கு



இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதி பூண்டமக்களே வரலாற்றைப்படைப்பார்கள்

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 12-06-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
natham23ela@yahoo.com

## புதிதாக எதுவுமில்லை!

தம்மைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்குச் சாதகமான முறையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதில் அளித்தது போன்று பேசியுள்ளார். அதாவது, தன்னாட்சி அதிகார சபை, விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளுதல் உள்ளிட்ட மேலும் இரு கோரிக்கைக்கும் அவரது பதில்கள் அவ்வாறானதாகஅமைந்துள்ளது.

ஆனால், சனாதிபதி சந்திரிகா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்துப் பேச்சுவார்த்தை நடாத்தியமைக்கு இதுவா காரணம்? ஏனெனில், இச்சந்திப்பில் சனாதிபதி தெரிவித்த கருத்துக்கள் புதியவையாக ஒன்றும் இல்லை. விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு தன்னாட்சி அதிகார சபை குறித்து பேசுவதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதாக என ஏற்கனவே அறிவித்திருந்தார். ஆகையினால், இது குறித்துப் பின்னர் குழப்பமோ அன்றித் தடுமாற்றமோ ஏற்பட்டிருப்பின் அதனை அவர்களே போக்கிக் கொள்ளவேண்டும்.

இதேவேளை, சனாதிபதி சந்திரிகா இவ்வாறு கூறிக் கொள்வதினால் மட்டும் இப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டுவிடமாட்டது, அவற்றின் அமுலாக்கம் என்பதும் முக்கியமானதாகும். ஏனெனில், சிறிலங்கா ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினை விடயத்தில் உடன்பாடுகள் / ஒப்பந்தங்கள் என்பனவற்றைத் தனியாகவும், அமுலாக்கம் என்பதனைத் தனியாகவுமே பார்க்கின்றனர்.

ஆகையினால், சனாதிபதி சந்திரிகா வாக்குறுதி அளித்தார் அன்றி உத்தரவாதம் கொடுத்தார் என்பதினால் எதுவும் நடந்துவிட்டதாக அர்த்தம் கொள்ள முடியாது. கடந்த கால வரலாறும் இதனையே போதிப்பதாகவுள்ளது. அதாவது, செய்யப்பட்ட உடன்பாடுகள் கூட அமுலாக்கம் பெறாமை காரணமாகவே இலங்கையில்இன்றைய மோசமான நிலைமை உருவாக வேண்டிவந்தது.

ஆகையினால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைத்தார், வாக்குறுதிகளை வழங்கினார் என்பதெல்லாம் ஒருபுறம் இருக்க, சனாதிபதி சந்திரிகா ஏன் தற்பொழுது சந்தித்தார், வாக்குறுதிகளை ஏன் வழங்கினார் என்பவையே முக்கியமான கேள்விகளாகவும் பதில் காண வேண்டிய விடயமாகவும் உள்ளது.

சனாதிபதி சந்திரிகா நெருக்கடிகள் ஏற்படும் போது வெளியாரை உதவிக்கு இழுப்பது ஒன்றும் புதியதல்ல. இந்த வகையிலேயே சபாநாயகர் தெரிவில் எதிர்க்கட்சிகளிடம் தோல்வியுற்றதும் மீண்டும் நோர்வே அரசை சமாதான முயற்சிகளில் ஈடுபடுமாறு அழைத்தார். இந்த வகையில் தற்பொழுது, பாராளுமன்ற நான்காவது அமர்வில் ஏற்பட்ட குழப்பமானது எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒன்று திரள வைத்துள்ளது. இந்நிலையானது சிறுபான்மை அரசாங்கமாகவுள்ள ஆளும் தரப்பிற்கு நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதாக வளர்ச்சி கண்டு வருகின்றது.

இத்தகையதொரு நெருக்கடியானசூழ்நிலையில்த்தான், சனாதிபதி சந்திரிகா தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார் வாக்குறுதிகளையும் வழங்கியுள்ளார், இதன் மூலம் ஆளும் கட்சி பாராளுமன்றத்தில் சந்திக்கும் நெருக்கடியில் இருந்து விடுபட முடியும் என்பது அவரது எதிர்பார்க்கையாக இருத்தல் வேண்டும்.

அதாவதுதமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இராஜதந்திர ரீதியில் கையாளும் முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

ஆகையினால், சனாதிபதி சந்திரிகா இத்தகைய வாக்குறுதிகளை வழங்கினும் அவரால் நடைமுறைப் படுத்துவதெண்பது யதார்த்தத்தின் பாற்பட்டதொன்றாக இருக்குமா என்பதும் கேள்விக்குரியதே. ஏனெனில், அரசாங்கத்தில் பங்காளிகளாகவுள்ள ஜே.வி.பி. இதற்கு இசைவானதொரு போக்கைக் கொண்டதாகத் தெரியவில்லை. ஏற்கனவே, விடுதலைப்புலிகளே ஏக பிரதிநிதிகள் என்பதையும், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பேச்சுவார்த்தைகளையும் அது நிராகரித்துள்ளது.இது ஒருபுறம் இருக்க, சனாதிபதி சந்திரிகாவின் உறுதிமொழிகள் ஏற்கனவே கூறப்பட்டவை என்பது மட்டுமல்ல, எத்தனை தூரம் நம்பகத் தன்மை கொண்டவை என்பதும் கேள்விக்குரியதே ஆகும். ஏனெனில், சனாதிபதி சந்திரிகா வடக்கு-கிழக்கு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் மட்டுமல்ல, தெற்கில் அவர் வழங்கிய வாக்குறுதிகளும் கூட அவரால் நிறைவேற்றப்பட்டதாக இல்லை.இதன் காரணமாகவே, சனாதிபதியின் வாக்குறுதிகள் குறித்து நம்பகத் தன்மை தொடர்பாக கூடி ஆராய்ந்த பின்னரே பதில் அளிக்க முடியும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிக்க வேண்டி வந்துள்ளது. சனாதிபதி சந்திரிகா தனது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள எத்தகையதொரு தீர்மானத்திற்கும் செல்லக்கூடும். அதற்காக அவர் எத்தகைய வாக்குறுதிகளையும் அளிக்கக்கூடும். ஆனால், வாக்குறுதிகளை மட்டும் நம்பி[illegible] மக்கள் அரசியல் நடாத்திய காலம் கடந்துபோய்[illegible]ட்டது.

# அரசுக்கெதிரான சகல பிரேரணைகளையும் ஆதரிப்போம் என்கின்றது ஜா.ஹெல உறுமய

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திற்கெதிராகக் கொண்டுவரும் சகல பிரேரணைகளுக்கும் முழு ஆதரவை வழங்குவதென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்றக் குழு தீர்மானம் எடுத்துள்ளது.

இது சம்பந்தமாகச் சகல எதிர்த்தரப்பினருடனும் கலந்தாலோசிக்க உள்ளோம். அரசாங்கம் தற்பொழுது பிழையான வழிகளில் செல்கின்றது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு எதிராகப் பல அவதூறான குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் சுமத்தியது. அவரின் தனிப்பட்ட வாழ்க்கைக்குப் பெரும் அபகீர்த்தியை உண்டு பண்ணியதுடன் ஆறுமுகம் தொண்டமானுக்கு வழங்கிய சகல பாதுகாப்புகளையும் இரத்துச் செய்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இரு பாராளுமன்ற அங்கத்தவர்களை விலை கொடுத்து வாங்கியதுடன் சத்தியப் பிரமாணம்செய்வதற்கு இடம் கொடுக்கவில்லை. அவர்களை அடித்துத் துன்புறுத்தியுள்ளார்கள். தற்பொழுது அவர்கள்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஜே.வி.பி.யினரும் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர். நல்லதொரு ஆட்சி நடத்த இவர்களுக்கு முடியாது. எதிர்க்கட்சியினரை அழிப்பதே இவர்களின் முழு நோக்கமாக உள்ளது. ஆனபடியால் எதிர்க்கட்சியினர் அரசுக்கு எதிராகக் கொண்டுவரும் சகல பிரேரணைகளையும் ஆதரித்து வாக்களிக்க எமது அரசியல் உயர்பீடம் முடிவு செய்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவினைப் பெற்று நாட்டை அபிவிருத்தி செய்யும் எண்ணம் அரசிற்கு இல்லை.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் உடுவத்த நந்த தேரர் கண்டியில் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

ஜாதிக ஹெலஉறுமயவின் மாவட்டக் கூட்டம் கண்டியில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு பேசிய தேரர்,மேலும்

அரசாங்கம் தொடர்ச்சியாக எமது கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற ஏன் என்றுதான் தெரியவில்லை என்றும் கூறியுள்ளார்.

# ஆப்கான் ஈராக்படை நடவடிக்கைகளுக்கு சிறில.விடம் ஆலோசனை பெற அமெ.விருப்பம்


ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் அமெரிக்கப் படைகள் படைநடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் சிறிலங்காவிடமிருந்து போரியல் தந்திரோபாயங்களை பெற்றுக் கொள்ளவேண்டும்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வருகை தந்துள்ள பசுபிக்பிராந்தியங்களுக்குப் பொறுப்பான அமெரிக்கப்படைகளின்கட்டளைத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஜேம்ஸ் கெம்பல் இந்தக்கருத்தை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் அமெரிக்கப் படைகள் தற்போது முகம் கொடுக்கும் நெருக்கடிகள் தொடர்பாக சிறிலங்கா படையினர் அனுபவம் உடையவர்கள்.எனவே சிறிலங்கா படைகளிடம் இது குறித்து தாம் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதுபயன் மிக்கதாக அமையும் எனறும் அவர் கூறினார்.சிறிலங்காப் படைத்துறை தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டார் அங்கு கருத் துரைத்த சிறிலங்காப் படைகளின் கட்டளைத் தளபதி லயனல் பலேகல்ல தாம் அமெரிக்கப் படைகளிடமிருந்து போரியல் தந்திரோபாயங்கள் குறித்த அறிவினை பெற்றுக் கொள்வதோடு தமது அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளவிருப்பதாகக் குறிப்பிட்டார் (32)

# ஒரேவிபத்தில் 3 வாகனங்கள் சிக்கின கிளிநொச்சியில் ஐவர்படுகாயம்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று இடம் பெற்ற வீதி விபத்தில் ஐந்து பேர் படுகாயம் அடைந்துள்ளனர். காலை8.00மணியளவில் கோவிந்தன் கடைச்சந்தியில் இருந்து வட்டக்கச்சி நோக்கிச் செல்லும் பாதையில் சந்தியிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் நடைபெற்றது. இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது,கிளிநொச்சியிலிருந்து



வட்டக்கச்சிநோக்கிசென்று கொண்டிருந்த பாரவூர்தி (கென்டர்) சிறியவளைவொன்றால் திருப்ப முற்பட்டபோது எதிரே வந்தமிதி வண்டியும்,உந்துருளியும் பாரவூர்தியுடன் நேருக்குநேர்மோதின. மிதிவண்டியை கடக்க முற்பட்ட உந்துருளியும் மிதிவண்டியுமே பாரவூர்தியுடன் மோதியதாக சம்பவத்தை நேரிலப் பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர். இதன் போது உந்துருளியில் பயணித்த இரு சிறுவர்கள் உட்படநான்குபேர் படுகாயம் அடைந்துள்ளனர் அத்தோடு உந்துருளியும ,மிதி வண்டியும் பலத்த சேதத்திற்கு ள்ளானதோடு அடிபட்டு அருகில் இருந்த வாய்க்காலுக்குள் இறங் கிய பாரவூர்தி (கென்டர்)யும் கடும் சேதமடைந்துள்ளது. மேற்படி சம்பவத்தில் உந்துருளியில் பயணித்தஅளகேந்திரன் மோகேஸ்வரன் (வயது 34) காஞ்சிரங்குடாவைச் சேர்ந்த பாலன்சிவச்செல்வம் (வயது 24) ஆனைவிழுந்தனைச் சேர்ந்தகஜித்தா (வயது 8), வசந்தா (வயது 4) ஆகியோரும் மிதி வண்டியில் பயணித்த கொக்குவில் பொற்பதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புண்ணிய மூர்த்தி பத்மராசா என்பவருமே படுகாயம் அடைந்தனர். இவர்கள் உடனடியாக கிளிநொச்சிமாவட்டவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் உந்துருளியில் பயணித்தவர்கள் நால்வரும் மேலதிகசிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.(லோ.சு.தீ)

## புத்தளம் பா.உவை கைது செய்ய உத்தரவு

(கொழும்பு)

புத்தள மாவட்ட ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பாலிதரங்க பண்டாரவை உடனடியாக கைதுசெய்யுமாறு புத் தளமாவட்ட நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கடந்த தேர்தல்காலத்தில் இடம்பெற்ற 3 கொலைகளுக்கும் இவருக்கும் நேரடித்தொடர்பு இருப்பதாக கண்டறியப்பட்டதை அடுத்தும் கொலைகளை செய்த நபர்கள் அந்தக் கொலைகளை செய்யுமாறு பாலிதரங்கபண்டார என்றபாராளுமன்ற உறுப்பினர் நேரடியாக தமக்கு அறிவித்ததாக அவர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்ததை அடுத்தேமேற்படி பாராளுமன்ற உறுப்பினரை கைதுசெய்யுமாறு நீதிமன்றம் உத்தர விட்டிருக்கிறது. இது தொடர்பாக பாராளுமன்ற பொலிசாருக்கும் நீதிமன்றம் அறிவித்தல் விடுத்திருக்கிறது. (32)

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05


எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

2,000 கிலோ மீற்றர்கள் நீளத்துக்குக் காணப்படும்' பாரிய தடுப்புக் கற்பாறைத் தொடர்' (Great Barrier Reef) எனப்படும் அவுஸ்திரேலியாவில் உள்ள முருகைக் கற்பாறைத் தொடரே உலகின் மிக நீளமான உயிர்வாழும் அமைப்பாகும்.

# லெப். கேணல் சாள்ஸ் மண்டப திறப்புவிழா நிகழ்வில்...


## யாழ்.இல் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு தயார்ப்படுத்தல் நடவடிக்கை தீவிரம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணிக்கான தயார்ப்படுத்தல் வேலைகள் மிகத் துரிதமாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக யாழ்.மாவட்டத்தில் பிரதேச ரீதியாக பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் கூடி மக்கள் எதிர்கொள்ளும் இராணுவ மற்றும் அரசியல் நெருக்குவாரங்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழும் மக்களுக்குள்ள இயல்பு வாழ்வுப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதன் மூலம் எதிர் வரும் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஆர்ப்பாட்டப்போராட்டத்தின் போது ஒவ்வொரு பிரதேசங்களிலும் உள்ள இயல்பு வாழ்வுப்பிரச்சினைகளை தெளிவான முறையில் வெளிப்படுத்துவது இவ்வாறான ஒன்று கூடல்களின் நோக்கமாகும்.

அந்த வகையில் காரைநகர் பிரதேச மக்கள் அணி திரட்டும் வகையில் மேற்கு காரை நகர்ப் பகுதியில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது. காரை நகர் பிரதேச எழுச்சி பேரவை செயலாளர் ஏ.சிற்சபேசன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் காரைநகர் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் கானகன் யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப்பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். (33,செ)

## யாழ். தே.எழுச்சிப்பேரவையின் விசேட ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசியஎழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான விசேட ஒன்று கூடல் ஒன்று இன்று மாலை 3 மணியளவில் கோண்டாவிலிலுள்ள யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை காரியலயத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சூ.சிறில் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் ஒன்று கூடலில் சமகால அரசியல் நிலைமைகள் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படவேண்டிய விழப்புணர்வு செயற்திட்டங்கள் சமூகசேவை செயற்பாடுகள். என்பன குறித்து ஆராயப்படவுள்ளது.

எனவே மேற்படி ஒன்றுகூடலுக்கு யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச மற்றும் ஊரகஎழுச்சிப் பேரவை உறுப்பினர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## யாழ். கண்ணிவெடி அகற்றல் குறித்து ஆராய அமெரிக்கப் பிரதிநிதிகள் குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடியகற்றல் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காக அமெரிக்க அரசின் பிரதிநிதிகள் குழுவொன்று இன்று யாழ்.வருகை தரவுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலயத்தின் பிரதிநிதிகள், மற்றும் அமெரிக்காவிற்கான இலங்கை தூதுவராலயப் பிரதிநிதிகளுடன் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் அதிகாரிகளுமே வருகை தரவுள்ளனர்.

இன்று பிற்பகல் 2.00மணிக்கு யாழ்.செயலகத்திற்கு விஜயம் செய்யும் இக்குழுவினர் யாழ்.அரச அதிபரையும் செயலகத்தில் இயங்கும் கண்ணிவெடியகற்றல் ஒருங்கிணைப்பு அலுவலக அதிகாரிகளையும் சந்திப்பாரென கூறப்படுகின்றது. அவ்வேளையில் மேற்படி கண்ணிவெடியகற்றல் பணிகளுக்கான அமெரிக்க அரசின் புதிய நிதி ஒதுக்கீடு தொடர்பான அறிவிப்பொன்றை அவர்கள் வெளியிடலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (27)

## யாழ்.இல் காணமல் போனோர் குறித்து இன்று முக்கிய கலந்துரையாடல்

யாழ்.குடாநாட்டில் சிறிலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணமல் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தின் அங்கத்துவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமலாக்கப்பட்டோரை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக ஆராயப் படவுள்ள இக்கலந்துரையாடலில் சில முக்கியமான தீர்மானங்களும் நிறைவேற்றப்படவுள்ளது.

எனவே இக்கலந்துரையாடலில் யாழ்.குடாநாட்டிலுள்ள சகல காணாமல்போனோர் சங்க உறுப்பினர்களையும் காணாமல் போனோரின் பெற்றோர், பாதுகாவலர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் எஸ். சற்குணம் அறிவித்துள்ளார். (33)

## வகுப்புக்கள்

(அலுவலகசெய்தியாளர்)

பட்டபின் கல்வி டிப்புளோமா பாடநெறியினை தேசிய கல்வி நிறுவகத்தில் மேற்கொள்பவர்களுக்கான வகுப்புக்கள் இன்றும் நாளையும் நடைபெறஏற்பாடாகியுள்ளது.

மேற்படி வகுப்புக்கள் வழமையாக நடைபெறும் இடத்தில் வழமையான நேரத்தில் நடைபெறவுள்ளதெனவும் பயிற்சியாளர்களைத் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் சிரேஸ்ட விரிவுரையாளர் க.சின்னராசா வேண்டியுள்ளார். (சோ.கு)

## உந்துருளி வாகனத்துடன் மோதியது உந்துருளி ஓட்டிவந்தவர் படுகாயம்

பளை நகர்ப்பகுதியில் தபால் நிலையத்திற்கு அருகாமையில் நேற்றுக்காலை 8.00 மணியளவில் வீதி விபத்து ஒன்றில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது.

வீதியில் வேகமாக வந்து கொண்டிருந்த உந்துருளி கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்று கொண்டிருந்த பிக்கப்ரக வாகனத்துடன் வேகமாக மோதியது இதில் உந்துருளியை ஓட்டிவந்த பளை வண்ணாங்கேணி வடக்கைச் சேர்ந்த பரமேஸ்வரன் (வயது 31) என்பவர் படுகாமடைந்தார் இவர் பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளார்.நேற்று மாலை 4.00 மணிவரை சுயநினைவற்ற நிலையிலேயே இருந்ததாக வைத்தியசாலைச் செய்தி தெரிவிக்கின்றது. இவ்வீதி விபத்து பற்றிய விசாரனையினை தமிழீழ காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (11)

## பாராளுமன்ற வன்முறை தொடர்பாக பொலிசார் நடவடிக்கை எடுக்க தடையில்லை

### சபாநாயகர் லொக்குபண்டார

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற வன்முறை சம்பவங்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் விசாரணைகளைச் செய்வதற்கு பொலிசாருக்கு எந்தவித தடையும் இல்லை என சபாநாயக்கர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு சுதந்திரமாக கருத்து தெரிவிக்கும் சிறப்பு உரிமை மாத்திரமே பாராளுமன்றத்தின் உள்ளே வழங்கப் பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் உள்ளே வன்முறையில் ஈடுபடும் உரிமை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை பாராளுமன்றத்தில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக நேரடி படக்காட்சிகள் இருப்பதனால் பொலிசார் அதனூடாக விசாரணைகள் செய்வதற்கு எவ்வித தடையும் இல்லை என சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

## அக்மீமன...

தெரிவித்தாக நீதவான் கூறினார். இதனால் தேரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட இடைக் கால தடை உத்தரவை இம்மாதம் 25ஆம் திகதிவரை நீடித்ததாகவும் நீதவான் தெரிவித்தார். (32)

## குடிவரவு குடியகல்வு திணைக்களம் கிளிநொச்சியில் இடம்பெயர் சேவை

(அலுவலக செய்தியாளர்)

குடிவரவு, குடியகல்வு கடவுச்சீட்டு வழங்கும் விசேட இடம்பெயர் சேவை திணைக்கள அதிகாரிகளினால் கிளி. மாவட்ட அரச செயலகத்தில் எதிர்வரும் 24ஆம் 25ஆம் திகதிகளில் நடத்தப்பெறவுள்ளது.மேற்படி இருதினங்களிலும் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை கடவுச்சீட்டு வழங்கு வதற்கான நடவடிக்கையினை கிளி. மாவட்ட செயலகத்தில் குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் மேற்கொள்ளவுள்ளனர்.

கடவுச்சீட்டுக்ளை பெற்றுக் கொள்ளவுள்ளவர்கள் தங்கள் பகுதி கிராம உத்தியோகஸ்தர் அல்லது பிரதேசசெயலகர்களுடன் தொடர்பு கொண்டு அதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று அவற்றினை பூரணப்படுத்தி கோரப்பெற்றுள்ள ஆவணங்களுடன் இடம் பெயர்சேவையின் போது திணைக்கள அதிகாரிகளிடம் விண்ணப்பங்களை கையளிக்கும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கேட்டுக்கொண்டுள்ளார். (சோ.கு)

## முகமாலை...

வரை திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக மக்கள் சோதனைச்சாவடிகளூடான போக்குவரத்தினை மேற் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## இலங்கை...

புதிதாக நோர்வே இந்த செயற்பாட்டை நடைமுறைப்படுத்த இருக்கிறது.நோர்வேயின் தலையீட்டை பேச்சுவாத்தையில் எதிர்த்து வரும் ஜே.வி.பி. கட்சியின் அமைச்சர் ஒருவர் நோர்வே ஊடாக இத திட்டத்தை நடைமுறைப் படுத்த உத தேசித்திருப்பது நோக்கத்தக்கது.(32)

## கடற்புலிகளின்...

தொடர்ந்து கடற்புலிப் படையணிகளின் கலைநிகழ்வுகள் நடைபெற்றன இறுதியாக நவம் அறிவுக் கூட போராளிகளின் இசைக்குழுவின் நிகழ்வு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் போராளிகள் பொறுப்பாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேற்படி மாவீரர் லெப் .கேணல் சாள்ஸ் 1993 ஆம் ஆண்டு கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடனான மோதலின் போது வீரச்சாவடைந்தார்.

## நிலக்கண்ணி...

பட்டுள்ளதென்று குறிப்பிட்ட பலகையொன்று நாட்டப்பட்டிருந்தது இவ் எச்சரிக்கையை உதாசீனம் செய்தே இவர்கள் செயற்பட்டுள்ளனர்.

அத்துடன் சம்பவம் இடம் பெற்ற இடம் கண்ணி வெடியகற்றும் பிரிவினரால் வெடிபொருட்கள் அகற்றுவதற்காக தெரிவான பகுதியாகும் இப்பகுதி நடமாட்டத்தை தடுப்பதற்காக முன் குறிகாட்டிப் பட்டிகள் கட்டப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட பகுதியாகும்

கண்ணிவெடிகள் அகற்றப்படாத பகுதியென குறிகாட்டிகள் பொருத்தப்பட்டுள்ள பகுதிகளுக்குள் செல்வதனால் கண்ணிவெடியகற்றும் பிரிவினரின் அனுமதி பெற்றே செல்ல வேண்டும் ஆனால் இவர்கள் அனுமதிபெறாது தனியார் ஒருவர்காட்டிய உழவு இயந்திரப் பாதையில் பயணித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச.ஸ்)

## இரு...

என்ற சந்தேகத்தில் நாகர் கோவில் மணற்காடு, குடத்தனை உட்பட வடமராட்சி கிழக்குப்பகுதியில் படையினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (33,21)

## தண்ணீர்...

பகுதியிலிருந்து பயணித்த செல்லத்துரை குமரேசன் அல்லது செந்தூரன் (வயது18) என்பவர் ஸ்தலத்தி லேயே உயிரிழந்துள்ளார். காய மடைந்த இருவரில் ஒருவர் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளார். இவர்கள் கனகராயன் குளப்பகுதி வீதி புனரமைப்பில் ஈடுபட்டு வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலதிக விசாரணைகளை தமிழீழ காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.